பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை 10.10.2017 கதிர் 338

பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு,ஒக்.10

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் இன்று மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பணிப்பகிஷ்கரிப்பு இறுதித் தருணத்தில் கைவிடப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட மருத்துவர்களின் நியமனங்கள் பட்டியல் தொடர்பாகவே பக்கம் 18 »»

பிரதம நீதியரசராகத் தாம் போட்ட சட்டத் தாழ்ப்பாளை பிரஜையாக வந்து திறக்கக் கோருகின்றார் சரத் சில்வா

உயர் நீதிமன்றில் சுமந்திரன் நையாண்டி



கொழும்பு,ஒக்.10

மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டமைக்கு எதிராக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்த உயர்நீதிமன்றம் அந்தப் பூர்வாங்க விசார ணையை ஒக்ரோபர் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

''நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் தொடர்பில் நீதிமன்றம் தலையீடு செய்வதற்கு அரசமைப்பில் இருந்த ஒரு சிறிய வாய்ப்பையும் தாம் பிரதம நீதியரசராக இருந்த போது அடித்து மூடிய சரத் என் பக்கம் 18 »»

உள்ளூராட்சித் தேர்தல்

மைத்திரி – ரணிலின் கட்சிகள் கூட்டாக அன்னச் சின்னத்தில்?

கூட்டு எதிரணியைச் சமாளிக்க சந்திரிகா தரப்பினால் வியூகம்

கொழும்பு, ஒக்ரோபர் 10

ஜனவரியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது கூட்டு எதிரணியின் கடும் எதிர்ப்பைச் சமாளித்து, அரசியல் சவாலை எதிர்கொள்வதற்காக நல்லாட்சி அரசு புதிய வியூகம் வகுப்பது குறித்து ஆராய்ந்து வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றோர், நல்லாட்சி அரசின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒரே அணியில் - அன்னச் சின்னத்தில் - களமிறங்குவது ஒன்றே கூட்டு எதிரணியின் சவாலை முறியடிக்க ஒரே வழி என்று ஆலோசனை கூறியிருக்கின்றார். அந்தத் தலைமையும் இந்த யோசனையைச் சாதகமாகப் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

பக்கம் 18 »»

கைதிகளின் உண்ணாவிரத விடயம் ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு பேசும்

சிறை ஆஸ்பத்திரியில் அவர்களை நேரில் சந்தித்து மாவை தெரிவிப்பு

அநுராதபுரம்,ஒக்.10

உண்ணாவிரதமிருக்கும்நிலையில்அநுராதபுரம் சிறையிலிருந்து சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டிருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளையும் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்றுக் காலை நேரில் சென்று சந்தித்தார்.

அந்தக் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளைப்புறந்தள்ளி, சட்டமா அதிபர் திணைக்களம் எதேச்சதிகாரமாக நடப்பது பக்கம் 18 »»

அநுராதபுரம் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும்

அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ்.நகரில் மாபெரும் கவனவீர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில்ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை அரசு நிறை வேற்ற வேண்டும் எனவும், அரசியல் கைதிகள் அனைவரதும் விடுதலையை வலியுறுத்தியும்நேற்றுயாழ்ப்பாணத்தில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கவன பக்கம் 18 »»

உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றில் நிறைவேறியது

கொழும்பு,ஒக்.10

மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி மாகாணசபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால்நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

புதிய தேர்தல் சட்ட மூலத்துக்கு அமைவாக, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றப்பட்டுள்ளது. பக்கம் 18 »»

ஜனாதிபதி வழங்கிய பொறுப்பை நேர்த்தியாக நிறைவேற்றினேன்

அமைச்சர் பைஸர் முஸ்தபா பெருமிதம்

கொழும்பு,ஒக்.10

உள்ளூராட்சி சபைகள்மற்றும்மாகாண சபைகளுக்கான தேர்தல்முறைகளை மாற்றியமைக்கும் பொறுப்பை ஜனாதிபதி தன்னிடம் வழங்கினார் எனவும் அதனைத் தான் மிகவும் அனுகூலமான முறையில் நிறைவேற்றினார் என்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர்முஸ்தபா தெரிவித்துள்ளார்.

பக்கம் 18 »»

ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வில் கைத்துப்பாக்கி மீட்பு

கொழும்பு,ஒக்.10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட நிகழ்வில் துப்பாக்கி மீட்கப்பட்ட மற்றுமொருசம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் சொந்த இடமான பொலனறுவையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

பொலனறுவை – எத்து மல்பிட்டிய லக்ஷ்மி உயன கனிஷ்ட வித்தியாலயத்தின் இரட்டை பக்கம் 18 »»

அரசியல் கைதிகளுக்கு தீர்வு தராமல் ஜனாதிபதி, பிரதமர் வடக்கு வரமுடியாது

சவால் விடுக்கின்றார் சுரேஸ்

(எஸ்.நிதர்ஷன்)

அரசியல் கைதிகளுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் ஜனாதிபதியோ பிரதமரோ வடக்கு மாகாணத்துக்கு வரமுடியாது எனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் பக்கம் 18 »»

காலைக்கதிர் Kalaikkathir

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கவனவீர்ப்பு!

வவுனியா, ஒக். 10

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும், அவர்கள் மீதான வழக்குகளை தென் பகுதி நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வவுனியாவில் பொது அமைப்புக்களின்ஏற்பாட்டில்மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் பஸ் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10 மணியில் இருந்து ஒரு மணி நேரம் நடைபெற்றது.

தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் வழக்குளை வவுனியா மேல் நீதிமன்றில் இருந்து அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றியுள்ள நிலையில், அவர்கள் தொடர்ச்சியாக கடந்த 14 நாள்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அவர்களின் உடல் நிலை மோசமடைந் துள்ள நி லை யில் அ வ ர் க ளது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் இப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட

வர்கள் அதிமேதகு ஜனாதிபதி அ வ ர் க ளே ! சி றை க ளி ல் வாடும் அரசியல் கைதிகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்யுங்கள், கௌரவ பிரதமர் அவர்களே! அரசியல் கைதிகளின் விடயத்தை மனிதாபிமானத்துடன் அணுகி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்தரவாதமளித்த உங்களது உத்தரவாதத்தை நிறைவேற்றுங்கள், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே! ஜனாதிபதியின்வாக்குறுதியை அ ர சி ய ல் கை தி க ளு க் கு த் தெரிவித்து, உ ண் ணா வி ர தத்தை முடித்து வைத்தீர்களே, அதன் அடிப்படையில் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி அரசிற்கு அழுத்தம் கொடுங்கள், அனைத்துப் நாடாளுமன்ற உறுப்பினர்களே! ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்குக் காரணமாக இருந்த காரணிகள் இன்னமும் அப்படியே இருக்கின்றன, என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றுக்கு எதிர்ப்பேதும் தெரிவிக்காமல், அதனை ஏற்றுக்கொண்டுள்ள தாங்கள் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துங்கள், சர்வதேச சமூகமே! எந்த வழியில் பார்த்தாலும் பல்லாண்டுகளாக சிறைவாசம் அனுபவிக்கும் அரசியல் கைதிகள் அனைவரும் அரசியல் காரணங்களுக்காகவே தடுத்து வைக்கப்பட்டிருப்பது சர்வதேச சமூகத்திற்கும், இந்த நாட்டு மக்களுக்கும் நன்றாகவே தெரியும், எனவே, நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காகவும், நாங்கள் உங்கள்மீது வைத்துள்ள நம்பிக்கையை அங்கீகரிப்பதற்காகவும் சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுங்கள், தமிழ் அரசியல் தலைவர்களே, மக்கள் பிரதிநிதிகளே! அரசியல் கைதிகளின் விடுதலையை

வலியுறுத்தி நாங்கள் வீதிகளில் இறங்கிவிட்டோம். இனியாவது நீங்கள் எம்முடன் இணைவீர்களா? என அவர்கள் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், புதிய மாக்சிச லெனினிச கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (க-100)

உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐ.தே.கவுடன் இணைவோம்!

பிரதிஅமைச்சர் லசந்த அழகியவண்ண கூறுகிறார்

தேவைப்படும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களை நிர்வாகிக்க சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாக நிதி மற்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர் லசந்தஅழகியவண்ணதெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்று கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் தேவைப்படும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நிர்வாகத்தை நடத்திச் செல்ல சுதந்திரக் கட்சி தயாராக இருக்கிறது.

எதிர்வரும் ஜனவரியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கண்டிப்பாக நடை பெறும்.

புதிய தேர்தல் முறையில் நடைபெறும் இத்தேர்தலில் வேட்பாளர்கள் பெரும் நிதி செலவிடும் தேவை இருக்காது. அத்துடன், பெண்களின் பிரதிநிதித்துவமும் கணிசமான அளவில் அதிகரிக்கும்.

அதே நேரம் எந்தவோர் உள்ளூராட்சி மன்றத்தினதும் பிரதிநிதிகள் தொகையில் சரி பாதிக்கும் மேலாக வெற்றி பெறும் கட்சி மட்டுமே சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகியோரை தெரிவு செய்ய முடியும்.

இதேவேளை, ஏனைய கட்சிகளை விட கூடுதலாக ஆசனம் பெற்றுக் கொண்ட கட்சி என்ற அடிப்படையில் அவ்வாறு செய்ய புதிய தேர்தல் சட்டத்தில் இடமில்லை .

எனவே, தேவைப்படும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின்நிர்வாகத்தை முன்னெடுக்க சுதந்திரக் கட்சி தயாராகவே இருக்கின்றது என்றும் லசந்த அழகிய வண்ண குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பு வழிநடத்தற் குழுவின் இடைக்கால அறிக்கை குறித்த கருத்தரங்கு!

வவுனியா, ஒக். 10

புதிய அரசமைப்பு வழி நடத்தற் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவரும் அக்கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வவுனியா விருந்தினர் விடுதியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் புதிய அரசமைப்பபில் உள்ளடக்கப் பட்டுள்ள தமிழருடைய விடயங்கள், முஸ்லிம்களிற்கான விடயங்கள், புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்ட காணி, பொலிஸ் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி வடக்கு கிழக்கு இணைப்பு, போன்ற பல்வேறு விடயங்கள் இந்த கருத்தாடல் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.சிற்றம்பலம், எஸ்.கந்தசாமி (சட்டத்தரணி), இ.தம்பையா (சட்டத்தரணி), என். சிறிகாந்தா (ரெலோ அமைப்பின் செயலாளர்), வடமாகாண சபை சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான பிரசன்னா, கருணாகரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், அரசியல் ஆய்வாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-100)

வவு.மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலய 90 அடி வகுப்பறை கொட்டகை எரிந்து நாசம்!

வவுனியா, மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தின் மாணவர் வகுப்பறை கொட்டகை ஒன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வவுனியா, மறவன்குளம் பகுதியில் தரம் 10 வரையான வகுப்புக்களைகொண்டமைந்த பாரதிதாசன் வித்தியாலயத்தில் வகுப்பறை பற்றாக்குறை காரணமாக 90 அடி நீளமும், 16 அடி அகலமும் கொண்ட வகுப் பறை கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு அதில் தரம் 10 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்று வந்தன.

கிடுகினால்வேயப்பட்டிருந்த அந்த கொட்டகை முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், அவ் வகுப்பறையில் இருந்த தளபாடங்களும் தீயில் எரிந்துள்ளன. குறித்த பாடசாலையில் இன்றையதினம் ஆசிரியர்தினநிகழ்வுஇடம்பெற விருந்த நிலையில் அதிகாலை 12.30மணிவரை மாணவர்கள்,

பெற்றோர்கள் பாடசாலையில் அலங்கார வேலைகளைச் செய்து விட்டு வீடு சென்றிருந்தனர்.

இந்த நிலையில் காலை ஆறு மணியளவில் பாடசாலைக்கு பெற்றோர்கள் வருகை தந்த போதே பாடசாலை கொட்டகை தீயில் எரிந்து காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஈச்சங்குளம் பொலிஸாருக்கு காலை 6.15 மணியளவில் தகவல் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் பொலிஸார் 8.45 மணிக்கே அங்கு வருகை தந்திருந்தனர். இதன் காரணமாக காலை பாடசாலைக்கு வந்த மாணவர்கள் பாடசாலை வளவுக்குள் நுழையாது நீண்ட நேரம் வீதியில் நின்றிருந்தனர்.

இந்த தீ பரவலுக்கான காரணம் தெரியாத நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

(க-100)

தமிழ் கைதிகளின் கோரிக்கைகளை அரசு உடன் நிறைவேற்ற வேண்டும்

வலியுறுத்துகின்றார் டக்ளஸ் எம்.பி.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் தொடர்பாக அரசு கவனத்தில் எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில், நேற்று நடைபெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்–

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் 3 தமிழ் அரசியல் கைதிகளும் தம்மை விசாரணைகளே இல்லாமல் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்க வில்லை.

அநுராதபுரத்தில்தமதுவழக்கு நடைபெற்றால் தாம் மொழிப் பிரச்சினையைஎதிர்கொள்வார்கள் எனவும், வவுனியா வில் தமது வழக்கு நடைபெற்றால் தமது நியாயத்தைஅல்லதுசாட்சியத்தை தமிழ்மொழியில்முன்வைப்பதற்கு வசதியாக இருக்கும் என்றும், நியாயமான கோரிக்கையை வலியுறுத்தியே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையிலும் ஆராய்ந்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுத்து அரசின் தேசிய நல்லிணக்க விருப் பத்தை எமது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் .– என்றார்.



ஆளுநர் அலுவலகம் முன்பாக பாரிய போராட்டம்: வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் எச்சரிக்கை!

தமக்கு நியாயமான தீர்வு கிடைக்காவிட்டால் தமது போராட்டம் வேறுமாதிரியாக அமையும் என்று வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இதனைகூறியுள்ளனர். அவர்கள் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்:–

எங்களுடைய நிரந்தர நியமனம் தொடர்பாக கடந்த பல மாதங்களாக வடக்கு மாகாணங்களில் கவனவீர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டிருந்தோம்.

இவ் விடயம் தொடர்பில் பல தடவைகள் மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டமையுடன், வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கும் சென்றிருந்தோம்.

கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது வடக்கிலுள்ளசுகாதாரத்தொண்டர்களின் விபரங்களை ஆளுநர் தரப்பிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப் பட்டது.

அவ்விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் இன்று வரையும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், ஜனாதிபதியின் செயலாளர் எங்களுக்கு ஒரு உறுதிமொழி வழங்கியிருந்தார். தற்போது இரண்டரை மாதங்கள் கடந்த நிலையிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை.

நாங்கள் மிகவும் பாதிக்கப் பட்டவர்கள், வீதியில் கடந்த 118 நாள்களாக கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தோம்.

எனினும், ஆக்கபூர்வமான எவ்வித இறுதி முடிவும் கிடைக்காத பட்சத்தில் புதிய வடக்குமாகாண சுகாதார அமைச்சர் எங்களிடம் வந்து ஏற்கனவே எடுக்கப்பட்ட ஐந்து தீர்மானங்களுக்கு அமைவாகவும் எமது குடும்ப நிலைமைகள் காரணமாகவும் எமது போராட்டத்தைத் தொடரமுடியாத காரணத்தினால் எங்களுடைய கவன வீர்ப்புப் போராட்டத்தை இடை நிறுத்தியிருந்தோம்.

இருந்தும் கடந்த 45 நாள்களாக அவரவர்கள் தத்தமது மாவட்டங்களிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களையும், முதலமைச்சரையும் சந்தித்திருந்தோம்.

அதேபோல ஆளுநரையும் சந்தித்து மேற்படி விடயங்கள் தொடர்பாக மீண்டும் தெரியப் படுத்தியிருந்தோம். வடமாகாண சுகாதார அமைச்சரையும் சந்தித் திருந்தோம்.

அதேபோல வடக்கு மாகாணங்களில் சுகாதாரத்திணைக் களங்களின் அலுவலகங்களைத் திறந்து வைப்பதற்கு வந்த மத்திய சுகாதார அமைச்சரையும் சந்தித்து இது தொடர்பாகத் தெரிவித்திருந்தோம்.

எனினும், அந்தந்த மாவட்டங்களிலுள்ள அதிகாரிகள்தான் இது தொடர்பாக கவனம் எடுக்க வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதேபோல, ஆளுநரும் கடந்த வாரம் தெரிவித்துள்ளார். வடமாகாண அமைச்சரவையின் வாரியத்தினூடாகவே இவ் விடயங்களைக் கொண்டு செல்ல முடிவதுடன் அதற்கான தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

தற்போது, மத்திய அரசாங்கத்தினால் டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் என்ற போர்வையில் வடக்கு மாகாணத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கூடாகவும் நாடாளுமன்றத்தில் தீர்மானம்எடுக்கப்பட்டு50டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர் களை தற்போதுநியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யுத்த காலத்தில் 1992ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்று வரையும் நாம் சம்பளம் இன்றி வேலை செய்து வருகின்றோம் என்றும் கூறியுள்ளனர்.

எங்களை உள்வாங்கவில் லை. அதேநேரம் அரசியல் செல் வாக்கினால் இந்த 50 பேரும் உள்வாங்கப்பட்டுள்ளார்கள்.

இதைவிட இன்னும் பலரை இச்சேவைக்கு நியமிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் எங்களுக்குத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

நாங்கள் பல காலமாகப் போராடிவருகின்றோம். எங்களை விடுத்து நேரடியாக அவர்களைத் தொடர்புகொண்டு அலைபேசி யூடாக அவரசமான ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அவர்களை உள் சேர்ப்பதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இத்திட்டத்திற்குஎங்களைஏன் உள்வாங்கவில்லை என்பதே எங்களுடைய கேள்வியாக இருக்கின்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத் திற்கு முன்பாக வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் ஒன்றிணைந்து மாபெரும் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளோம்.

இதற்கும்எங்களுக்குசரியான பதில் கிடைக்காது விட்டால் போராட்டத்தினை வேறுமாதிரியான முறையில் மேற்கொள்வதற்கு ஒன்றிணைந்து தீர்மானம் எடுத்துள்ளோம். – என்றனர்.

யாழ்ப்பாணத்தில் கிணற்றுக்குள்ளிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப்பகுதியில் கிணற்றுக் குள்ளிருந்து வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

இந்தப் பெண் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலா மென்ற சந்தேகத்தில் அவரு டையமகன்பொலிஸாரால்கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இராசாவின் தோட்டதைச்சேர்ந்த 70 வயதான செ.ரத்னாம்பிகை என்ற வயோ திபப் பெண்ணே உயிரிழந்துள் ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது–

இராசாவின் தோட்டம் பகுதி யில்உள்ளவீடுஒன்றில்மின்சார இணைப்பு வேலைக்கு மின்சார சபையினர் நேற்றுச் சென்றுள்ள னர்.

அப்போது மேற்படி பெண் ணின் அந்த வீட்டில் வசிக்கும் 35 வயதுடைய சுதர்சன் என்பவர் இருந்துள்ளார்.

ஏன் இங்கு இருக்கிறீர்கள் என கேட்ட போது அம்மாவை அடித்து கொலை பண்ணி கிணற் றுக்குள் வீசி விட்டேன் என தெரி வித்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

கிணற்றுக்குள் பார்த்த போது அங்குசடலம்இருப்பதைமின்சார சபையினர் பார்த்துள்ளனர்.

இந்த இளைஞன் மன நிலை பாதிக்கப்பட்டவர் எனத் தெரிய வருகிறது. மேலும் மன நிலை பாதிக்கப்பட்ட இந்த நபரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளமையுடன் மேலதிக விசாரணைகளையும்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதி தலைமையில் உலக தபால் தினம்

உலக தபால் தின 143 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று ஜனாதிபதிதலைமையில்பொலன் னறுவை புத்தி மண்டபத்தில் இடம் பெற்றது.

சர்வதேச தபால் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத் தின் படி 1970 முதல் உலக நாடு களில் ஒவ்வொரு ஆண்டும் ஒக் டோபர் 09 ஆம் திகதி உலக தபால் தினமாக அனுஷ்டிக்கப்படு கிறது.

143 ஆவது உலக தபால் தினத்தை முன்னிட்டு வெளியிடப் பட்ட புதிய முத்திரை மற்றும் முத லாம் நாள் அஞ்சல் உறை ஜனாதி பதியிடம் கையளிக்கப்பட்டதுடன் ஈகொமஸ் இணையத்தளம் ஜனா திபதியினால் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இதேவேளை, 143 ஆவது உலகதபால்தினத்தைமுன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு மலரும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட் டதுடன் தபால் சேவை ஊழியர் களைப் பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் விருதுகளும் வழங்கப் பட்டன.

தபால் தினைக்களத்திலுள்ள 8,500 தபாற் காரர்களுக்கு புதிய துவிச்சக்கர வண்டிகள் மற்றும் தபால் போக்குவரத்து சேவையை வளப்படுத்துவதற்கு 350 மில்லி யன் ரூபா செலவில் வான் மற் றும் கெப் வாகனங்கள் ஜனாதி பதியினால் தபால் தினைக்களத் திற்கு இதன்போது வழங்கி வைக் கப்பட்டன.

307 மில்லியன் ரூபா செல வில் நிர்மாணிக்கப்படவுள்ள பொலன்னறுவை தபால் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் ஜனாதி பதியினால் நடப்பட்டது.

உடகம தம்மானந்த நாயக்க தேரர், தபால் மற்றும் முஸ்லிம் சமய அலுவலர்கள் அமைச்சர் எம்.எச்.ஏ ஹலீம், பேலல ஜயரத்ன, சம்பத் ஸ்ரீ நிலந்த, தபால் மா அதிபர் ரோஹன அபேரத்ன ஆகியோர் இந்நிகழ்வில்கலந்துகொண்டனர்.

மைத்திரி...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடைபெறவிருக்கின் றது. இவற்றை ஆளும் ஸ்ரீ.ல.சு. கட்சி, ஐ.தே. கட்சி ஆகியவையும் அவற்றின் கூட்டுக் கட்சிகளும் ஒரே பட்டியலில் பங்கீட்டு, இணக் கம் கண்டு ஒரே அணியில் போட்டி யிட்டால் கூட்டு எதிரணியை இலகு வில் பின்னடைய வைக்கலாம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

தனிதனியாகப் போட்டியிட்டு கூட்டு எதிரணியை பலமடைய வைப்பதிலும்பார்க்கதற்போதைய நிலையில்ஓரணியில் இணைந்து போட்டியிடுவது உசிதமானது என ஆளும் தரப்பின், பிரதான தலைவர்கள் கருதுகின்றனர் என வும் தெரிவிக்கப்பட்டது. (உ)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

முன்னாள் பிரதம நீதியரசர் இப்போது உயர்நீதிமன்றத்தில் மனுதாரர்

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் நீதித்துறைச் செயற்பாடு குறித்தே இப்பத்தியில் நேற்றுப் பார்த்தோம்.

அவர் இப்போது உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான மனு இது.

நாடாளுமன்றத்தில் முன்னறிவித்தல் கொடுத்து, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட சட்டமூலத்துக்கும், கடைசியில் நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கும் இடையில் எந்தத் தொடர்புமில்லை, நிலுவையில் இருந்த ஒரு சட்ட மூலத்தைப் பயன்படுத்தி, வேறு ஒரு சட்டத்தை - குழுநிலை விவாதத்தின் போது அப்படியே தலைகீழாக மாற்றிவிட்டு - நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டு அடுக்கியிருக்கின்றார் முன்னாள் பிரதம நீதியரசர்.

ஆகவே, நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் தவறானது என உத்தரவிடுமாறு அவர் தமது அடிப்படை உரிமை மீறல் மனுவில் கோரி இருக்கின்றார்.

சரத் என் சில்வா குறிப்பிடுகின்ற விடயங்களில் உண்மைகள் இருக்கின்றன. அப்படித்தான் அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது என்பதை இப்பத்தியில் நாமே சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

ஆனால், இவ்வாறான நடவடிக்கை ஒன்று முன்னர் எடுக்கப்பட்ட போதும் உயர்நீதிமன்றத்திடம் முறையிடப்பட்டது. ஆனால், அப்போது பிரதம நீதியரசர் கதிரையிலிருந்து சட்டத்தைத் தனக்கேற்றால் போல வளைத்து வியாக்கியானம் செய்து கொண்டிருந்த சரத் என் சில்வா என்ன செய்தார்? அப்போதைய அரசைத் தாஜா செய்வதற்காக அந்த முறையீட்டைத் தூக்கிக் கடாசினார். தமக்கேற்றபடி தீர்ப்பு எழுதினார். ஒரு சட்ட மூலத்தில் சபாநாயகர் ஒப்பமிட்டு அது சட்டமானால் அதற்குப் பின்னர் உயர் நீதிமன்றம் அதில் தலையிடவே முடியாது எனத் தனது பேனாவால் தீர்ப்பு எழுதியவர் அவர்தான். இப்போது அதே போன்ற விடயத்துக்கு - சபாநாயகர் ஒப்பமிட்ட சட்டத்துக்கு - எதிராக உயர்நீதிமன்றத் தீர்ப்பு வழங்குமாறு கோருகின்றார்.

தாம் வழங்கிய முன்மாதிரித் தீர்ப்புக்கு முற்றிலும் மாறாகத் தீர்ப்பு வழங்கும்படி அதே உயர்நீதிமன்றத்திடம் அவரே விண்ணப்பிக்கின்றார்.

2003 ஆம் ஆண்டில் பிரமுக வங்கி முறிந்து விடும் நிலையை எட்டி அந்த விவகாரம் சர்ச்சையான போது, அப்போதைய ரணிலின் அரசுக்கு ஒரு சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

நிதி சம்பந்தமான சட்டமூலம் ஒன்று நிலுவையில் இருந்தது. அந்தச் சட்டமூலத்தை சபையில் எடுத்து, குழுநிலை விவாதத்தில் சட்டமூலத்தின் பெயர் அப்படியே இருக்க, வங்கிகள் தொடர்பான சட்டமாக அதை நாடாளுமன்றத்தில் வைத்தே தனக்கேற்றால் போல மாற்றியமைத்துக் காரியத்தை ஒப்பேற்றியது அப்போதைய ரணிலின் அரசு.

அதற்கு எதிராக எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் அரசமைப்பில் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு அமைய உள்ள பிரிவின் கீழ் - 120 ஆவது பிரிவின் அடிப்படையில் - உயர்நீதிமன்றத்தில் வாதாடினார்.

சுமந்திரனின் வாத விடயங்களைத் தனது தீர்ப்பில் மெச்சிப் பாராட்டிய அப்போதைய பிரதம நீதியரசர் சரத் சில்வா, சபாநாயகர் சட்டத்தில் ஒப்பமிட்டு அது சட்டமாகி விட்டதால் அதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று குறிப்பிட்டு அந்த விண்ணப்பத்தை நிராகரித்தார்.

இப்போது சரத் சில்வா முறையீடு செய்யும் விடயத்தை விட அப்போது சுமந்திரன் வாதாடிய விவகாரம் ஆழமான - நியாயமான - பல சட்ட நீதிகளைக் கொண்டதாக இருந்தது.

அந்தச் சட்ட விவகாரத்தில், நிதி தொடர்பான சட்டமூலத்தை தலைகீழாக மாற்றி, அந்தப் பெயரில் வங்கிகள் தொடர்பான சட்டத்தை நிறைவேற்றினார்கள்.

ஆனால், இப்போது மூலமாக - முதலில் - கொண்டு வரப்பட்டது மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம்தான். ஆனால், மூலச் சட்ட வடிவத்தில் பெண்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் அளிக்கும் விதத்தில் அது அமைந்திருந்தது. அதனையே விகிதாசார மற்றும் தொகுதி முறைத் தேர்தல்களுக்கான முறைமைகளை ஏற்படுத்தும் சட்டமாக இறுதியில் மாற்றினார்கள்.

ஆகவே, இப்போது சரத் என் சில்வா கோருவதை விட, 2003 இல் சுமந்திரன் தாக்கல் செய்த மனுவின் சட்டவாதம், வாய்ப்பும் ஆழமானவை; நீதி நியாயங்கள் உள்ளவை.

அது மட்டுமல்ல, நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் நிறைவேறியமையை ஆட்சேபிப்பதற்கான வழிமுறைகள் அரசமைப்பின் 120 ஆவது பிரிவின் கீழ்தான் உள்ளன. அதன் கீழ்தான் அப்போது சுமந்திரனால் அந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதையே அப்போதைய, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா எதேச்சதிகாரமாக நிராகரித்தார்.

ஆனால், இப்போது நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிரான தமது வழக்கை, தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் கீழ் அடிப்படை உரிமை மீறல் மனுவாகத் தாக்கல் செய்திருக்கின்றார் சரத் என் சில்வா.

அதாவது, நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டமை தவறு என்பதை அடிப்படை உரிமை மீறல் மனு மூலம் சவாலுக்கு உட்படுத்துவது சாத்தியமானதா என்பது புரியவில்லை.

எது, எப்படியென்றாலும், பிரதம நீதியரசராக இருந்த சரத் நந்தன சில்வா முன்னர் வழங்கிய அவரது தீர்ப்பு மட்டுமே இப்போது அவர் தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரிக்கப் போதுமானதாகும்.

நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு!

அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் சற்றுமுன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தை நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் முன்வைப்புக்கு முன்னதாக, அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடு இந்த சட்டமூலத்தின் ஊடாக கோரப்படும்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் அரச செலவீனம் 3982 பில்லியன் ரூபா ஆகவும் அரச வருமானம் ஏறக்குறைய 2175 பில்லியன் ரூபா ஆக வும் மதிப்பீடு செய்யப்பட்டுள் ளது.

இதற்கமைய, தேசிய பாது காப்பிற்காக, 29 ஆயிரத்து 71 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இதற்கு அடுத்த படியாக நிதி மற்றும் ஊடக அமைச் சிற்கு 22 ஆயிரத்து 757 கோடி ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள் ளது.

கல்வி அமைச்சிற்கு 10 ஆயிரத்து 288 கோடி ரூபா ஒதுக் கிடப்பட்டுள்ளன.

இதேவேளை, சுகாதார அமைச்சிற்கு 17 ஆயிரத்து 839 கோடி ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கான எந்த திட்ட மும் இல்லை என அமைச்சர் அர்ஜூன ரணதுங்க இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற கட்ட ளைச் சட்டத்தில் உள்ள திருத் தங்களை நிறைவேற்றுவற்கு விசேட அமர்வு நாடாளுமன்றத் தில் தற்போது இடம்பெற்று வருகின்றது.

வவுனியாவில் படப்பிடிப்பின் போது திடீரென நுழைந்த இளைஞனால் பரபரப்பு!

வவுனியா, ஒக்.10

படப்பிடிப்பின் போது திடீ ரென நுழைந்த இளைஞனொ ருவன் ரகளையில் ஈடுபட்ட மையால் வவுனியா பஸ் நிலை யத்தில் பரபரப்பு ஏற்பட்டுள் ளது.

வவுனியா பஸ் நிலையத் தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பஸ் நிலையத் தில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வவுனி யாவின் பிரபல இயக்குநரும் நடிகருமான வினோத்தின் இயக்கத்தில் ஈழத்து நாயகி மிதுனா நடிக்கும் ஆல்பம் ஒன் றின் காட்சிகள் படமாக்கப்பட் டுக்கொண்டிருந்தன.

அந்தப்பகுதிக்குள் திடீரென நுழைந்த இளைஞனொருவர் தனக்கும் நடிக்க வாய்ப்பு தரு மாறு தகராறில் ஈடுபட்டமையு டன் பெரும் குழப்பத்தையும் உண்டு பண்ணியிருந்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட் டிருந்த பொலிஸார் இந்த இளைஞனைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

(க)

மாடு மேய்க்கச் சென்ற குடும்பஸ்தர் யானைத் தாக்குதலுக்கு உள்ளானார்!

மட்டக்களப்பு, ஒக். 10

மட்டக்களப்பு மாவட்டத் தின் கரடியனாறு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஈரளக் குளம் பகுதியில் யானை தாக் கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கல்முனையில் இருந்து நேற்று அதிகாலை மாடுகளை மேய்ச்சலுக்காக கொண்டு சென்றவரே இவ்வாறு யானை யின் தாக்குதலுக்கு உள்ளாகி யுள்ளார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

51 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு யானையின் தாக்கு தலுக்குள்ளாகி படுகாயம் அடைந்தநிலையில் செங்கலடி வைத்திசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

'விரியப் போராடும் அரும்புகள்' கவிதைத் தொகுப்பு வெளி யீட்டு விழா நாளைமறுதினம் வியாழன் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.பல் கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளர் கலா நிதி ச.க.கண்ணதாஸ் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக மாணவன் கவிஞர் முகமது அஸ்கரின் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவுக்குத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி க.சுதாகர், பேராசிரியர்களான தி.வேல்நம்பி, ஜே.பி.ஜெயதேவன், சி.ஸ்ரீசற் குணராசா, திருமதி துஷ்யந்தி மிகுந்தன், கலாநிதி சு.ரவிராஜ், கலாநிதி அ.அற்புதராஜா, எஸ்.எஸ்.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவார்கள்.

கவிஞர் சோ.பத்மநாதன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.(இ-19)

பேச்சு ஆங்கிலக் கற்கை; 18 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 10

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தால் தொடர் பாடலுக்கான பேச்சு ஆங்கில (Spoken English) குறுகிய காலக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன. 18 வயதுக்கு மேற் பட்ட அனைவரும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப் பிக்க முடியும். இந்தக் கற்கை நெறி மூன்று மாத காலங் களைக் கொண்டது.

இந்தக் கற்கை நெறிக்குரிய வகுப்புகள் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலை யத்திலும், இல. 363, தலை மன்னார் வீதியில் அமைந் துள்ள மன்னார் கற்கை நிலை யம் ஆகியவற்றிலும் நடை பெறவுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் மேற் கூறிய கற்கைநிலையங்களில் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடி யும் என யாழ்ப்பாணப் பிராந் திய நிலைய உதவிப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (இ)

உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஒப்பசி - 2017

சுய மார்பகப் பரிசோதனையை, பெண்கள் செய்வதன் மூலம் மார்பகப் புற்றுநோயை ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து கொள்ள முடியும். இருபது வயதுக்கு மேற்பட்ட அனைத் துப் பெண்களும் இந்தப் பரிசோதனையைத் தங்கள் வீடுகளிலிருந்தே செய்துகொள்ள முடியும்.

Be Breast Aware

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

நாளை

11.10.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : மிருகசீரிடம் பி.ப. 2.41 வரை
திதி : சஷ்டி பி.ப. 12.57 வரை

சுபநேரம் : 4.32 – 6.02 வரை
இராகுகாலம்: 12.02 – 1.32 வரை

அணு, இரசாயன, உயிரியல் ஆயுதங்கள்; இலங்கையில் தடை செய்யும் அறிவித்தல்!

கொழும்பு, ஒக். 10

அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை இலங்கையில் தடை செய்யும், சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் ஐ.நா. ஒழுங்குமுறைகளின் படி ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, அணுசக்தி, இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களைத் தயாரிப்பது, பெறுதல், வைத்திருத்தல், இடமாற்றம் செய்தல் அல்லது பயன்படுத்தினார் என எவர் ஒருவர் உயர்நீதிமன்றால் குற்றவாளியாகக் காணப்படுவாரானால், 20ஆண்டுகளுக்கு உட்பட சிறைத்தண்டனை அல்லது 50 லட்சம் ரூபாவுக்கு உட் பட்ட அபராதம் அல்லது இரண் டும் விதிக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு உதவுகின்ற எந்தவொரு நபரும் அல்லது குழுவும் புதிய விதிமுறைகளின்படி அதே குற்றத்தைச் செய்ததாகக் கருதப்படும்.

இதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையை அல்லது 10 லட்சம் ரூபாவுக்கு மேற்படாத அபராதத்தை அல்லது இரண் டையும் அனுபவிக்க நேரிடும்.

புதிய ஒழுங்குமுறைகளின் கீழ், இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு, பெற்றுக் கொள்வதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு, போக்குவரத்து செய்வதற்கு, பரிமாற்றம் செய்வதற்கு, பயன்படுத்துவதற்குத் தனிநபர்கள், நிதியை அல்லது நிதி உதவிகளைப் பயன்படுத்தமுடியாது.

புதிய ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்தப் பாதுகாப்பு அமைச்சர் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பார்.

ஜனாதிபதியின் எளிமை; வைரலாகும் புகைப்படம்!

கொழும்பு, ஒக். 10

இலங்கையின் சமகால ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் எளிமையானவர் எனப் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவர் சாதாரண மனிதராக இயல்பாக நடந்து கொள்கின்றமை சர்வதேச நாடுகளையும் பெரிதும் ஈர்த்துள்ளது.

இந்தநிலையில், யாழ்ப்பாணத்திலுள்ள ஹெமன் ஹில் கோட்டைக்கு அண்மையில் ஜனாதிபதி மைத்திரி விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் சேர்த்துள்ளார்.

கோட்டையில் அமைந்துள்ள சிறைச்சாலைக்கு முன் ஜனாதிபதி அமர்ந்திருக்கும் எளிமை பலரையும் கவர்ந்துள்ளது.

மிகவும் எளிமையான

அவரின் செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளனர். மக்களின் மனம்வென்ற ஒரே தலைவர் எனவும், நாட்டின் சிறந்த தலைவர் எனவும் ஜனாதிபதியைப் பாராட்டி பலரும் தமது கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர்.

அண்மையில் அறிவிக்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பரிந்துரை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறைக் கைதிகளுக்காகக் குண்டு துளைக்காத பஸ்!

சிறைக் கைதிகளைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்காக கேகாலை சிறைச்சாலை அதிகாரிகளால் வடிவமைக்கப்பட்ட குண்டு துளைக்காத பஸ், மீதான துப்பாக்கிச்சூடு பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுக்குறுந்த பகுதியில் வைத்து இந்த பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, கைதிகளை அதிலும் குறிப்பாகப் பெரிய குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ள அதிக பாதுகாப்பு அவசியமான கைதிகளை அழைத்துச் செல்வதற்கு இந்த பஸ்ஸை பயன்படுத்தலாம் என சிறைச்சாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பஸ்ஸை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தால் 3 கோடி ரூபா செலவாகும் என்றும், எனினும் உள்நாட்டுத் தயாரிப்பில் 10 லட்சம் ரூபா முதலீட்டில் இந்தப் பஸ் தயாரிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2018 இற்கான வரவு- செலவுத் திட்டம்; 1,813 பில்லியன் ரூபா பற்றாக்குறை!

கொழும்பு, ஒக். 10

2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான அரசாங்க செலவினம் 3 ஆயிரத்து 982 பில்லியன் ரூபாவாக இருக்கும் என்றும், எதிர்பார்க்கப்படும் வருமானம், 2ஆயிரத்து 175 பில்லியன் ரூபாவாக இருக்கும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 2017ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களை விட, (ஆயிரத்து 819 பில்லியன் ரூபா) , 2018ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் அரச செலவினம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

அதேவேளை, எதிர்பார்க்கப்படும் அரசவருமானமும் அதிகரித்துள்ளது. 2017ஆம் ஆண்டு ஆயிரத்து 978 பில்லியன் ரூபாவாக எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானம், 2018ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 175 பில்லியன் ரூபாவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், பற்றாக் குறை ஆயிரத்து 813 பில்லியன் ரூபாவாகும்.

நாடாளுமன்றத்தில் 2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுப் பிரேரணையை நிதி இராஜாங்க அமைச்சர் ஏரான் விக்கிரமரத்ன சமர்ப்பித்தார்.

இது 2018 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் முதலாவது வாசிப்பாகக் கருதப்படும். இதன் இரண்டாவது வாசிப்பு, எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி இடம்பெறும்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர, அரச வருமான மூலங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பாகவும், பற்றாக்குறையை ஈடுசெய்யும் வழி முறைகள் தொடர்பாகவும் விளக்கமளித்துள்ளார்.

(க)

2018 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஒக். 10

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திலும், பாதுகாப்பு அமைச்சுக்கான செலவினமே முதலிடத்தைப் பிடிக்க உள்ளது என நிதி அமைச்சின் அதிகாரபூர்வ புள்ளி விவரங்களில் இருந்து தெரியவருகிறது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் கழிந்த பின்னரும் பாதுகாப்புச் செலவினம் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் 2018ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைய பாதுகாப்பு அமைச்சுக்கு 290.71 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

இதில், 26 ஆயிரத்து 711 கோடியே 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா மீண்டெழும் செலவினமாகவும், 3 ஆயிரம் கோடிரூபாமூலதனச்செலவினமாகவும் இருக்கும்.

அதனையடுத்து, நிதி அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிதி மற்றும்ஊடகத்துறை அமைச்சுக்கான மீண்டெழும் செலவினங்களுக்கு 20 ஆயிரத்து 117 கோடியே ,8 லட்சத்து 53 ஆயிரம் ரூபாவும், மூலதனச் செலவினமாக 3 ஆயிரத்து 754 கோடியே 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு - மீண்டெழும் செலவினம்-13ஆயிரத்து799கோடியே 9 ஆயிரத்து 98 ஆயிரம் ரூபா, மூல தனச் செலவினம், 440 கோடி ரூபா.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சு - மீண்டெழும் செலவினம் 11 ஆயிரத்து 976 கோடியே ஒரு லட்சத்து 98 ஆயிரம் ரூபா, மூல தனச் செலவினம், 2 ஆயிரத்து 267 கோடியே 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

வெளிவிவகார அமைச்சு - மீண்டெழும் செலவினம் ஆயிரத்து 856 கோடியே 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, மூலதனச் செலவினம் 12 ஆயிரத்து 267 கோடியே 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

உயர்கல்வி அமைச்சு - மீண்டெழும் செலவினம் 32ஆயிரத்து 757 கோடி ரூபா, மூலதனச் செலவினம் 1500 கோடி ரூபா.

ஜனாதிபதி பணியகம் - 48ஆயிரத்து 700 கோடியே 3லட்சத்து 52ஆயிரத்து 500 ரூபா.

பிரதமர் பணியகம் - ஆயிரத்து 770 கோடியே 2 லட்சத்து 68 ஆயிரம் ரூபா.

காலைக்கதிர் Kalaikkathir

முதலீட்டுக்குத் தேவையான சகல வசதிகளும் கிழக்கில்!

கிழக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஒக். 10

கிழக்கு மாகாணம் முதலீட்டுக்குத் தேவையான பல வசதி வாய்ப்புக்களை கொண்டுகாணப்படுகின்றன. அதிகமாக பயன்படுத்தப்படாத காணிகள் வெறுமனே இருப்பதுஇம்முதலீட்டுசெயற்பாட்டுக்கு உந்து சக்தியாக அமைவதாக கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித பேகொல்லாகம தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஓய்வூதிய தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.புஸ்பகுமார தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கிழக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஓய்வூதியம் பெற்றவர்கள் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு உங்களுடைய பங்களிப்பை வழங்குதல் வேண்டும். விசேடமாக தனியார் துறையிலே இணைந்து செயற்படல், காத்திரமான தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதன் மூலம் இச்செயற்பாட்டை மேலும் வலுவுள்ளதாக மாற்ற முடியும்.

உள்ளூராட்சி மன்றங்களை மேற்பார்வை செய்வதற்கு குழு அவசியமென்றும் சில உள்ளூராட்சி மன்றங்களிலே ஒளிராமல் இருக்கின்ற மின் விளக்குகளை மாற்ற முடியாமல் இருக்கின்ற செயலாளர்கள் இருக்கின்றபோது அப் பிரதேசத்தினுடைய ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்து தீர்க்க முடியும் எனக் கேள்வி யெழுப்பியதுடன் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கு வழங்குகின்ற சேவையை மகத்தான சேவையாக மாற்றியமைக்க இம் மேற்பார்வை குழு பல்துறை சார் உத்தியோகத்தர்களை இணைத்து அமைக்கப்படும்.

உலகிலே தற்கொலை முயற்சிகளை அதிகளவில் மேற்கொள்ளும் நாடுகள் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தில் காணப்படுகிறது.

அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணம் இவ்விடயத்தில் முதன்மை பெறுவது கவலைக்குரியது.

இந்தநிலையை மாற்றியமைக்க ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக உளநலப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் அதற்கு துறைசார் நிபுணர்களுடைய ஒத்துழைப்பின் அவசியம் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில், பொது நிர்வாக முகாமைத்துவ பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.எம்.சரத் அபே குணவர்தன மற்றும் ஓய்வூதிய திணைக்கள அதிகாரிகள் ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க)

சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தியவர் கைது!

மட்டக்களப்பு, ஒக். 10

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையை தடுக்கும் வகையில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தால் பல் வேறு வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் வாகனேரி குளத்தில் நேற்று மாலை சட்ட விரோதமான முறையில் மண் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை காவத்தமுனைப் பகுதியில் வைத்து பொலிஸார் கைப்பற்றியதுடன், சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி

தலைமையிலான குழுவால் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(க)

மாமாங்கப் பிள்ளையாரை நேற்றுத் தரிசித்தார் ஆளுநர்!

மட்டக்களப்பு, ஒக். 10

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம மட்டக்களப்பிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு ஸ்ரீமாமாங்கப்பிள்ளையார் ஆலய விசேட பூஜையில் நேற்றுக் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இப் பூஜையில் முன்னாள் கிழக்குமாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் மற்றும் திணைக்களப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆலய அபிவிருத்தி தொடர்பாக ஆலய பரிபாலன சபையினரிடம் ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.

ஆலய தீர்த்தக் கேணியை பார்வையிட்டு அதனை புனரமைப்பதற்கும், ஆலய காணி மற்றும் அதன் பகுதிகளை எல்லையிட்டு வடிவமைப்பது தொடர்பில் அறிக்கைகளை வழங்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய உணவு உற்பத்தி வார நிகழ்வுகள் மட்டக்களப்பில்!

தேசிய உணவு உற்பத்தி வாரத்தின் நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின், 'விளைச்சல் பெருகிட ஒருமித்து எழுவோம்' என்ற தேசிய வேலைத்திட்டம், இலங்கை மக்களுக்கான உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனை முன்னிட்டு நேற்றைய தினம் மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த வழிபாடுகளின்போது கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் உட்பட திணைக்களத் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வடகொரியாவுடனான அனைத்து தொடர்புகளுக்கும் இலங்கை தடை!

கொழும்பு, ஒக். 10

வடகொரியாவுடன் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு இலங்கையைச் சேர்ந்த தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்குத் தடை விதித்து, சிறப்பு வர்த்தமானி அறிவித்தல்ஒன்றுவெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டதீர்மானத்துக்கு அமைய, இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன இந்த சிறப்பு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, வடகொரியாவில் உள்ள எந்தவொரு நபருடனும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள இலங்கையர்எவரும்,சொத்துக்களை வழங்குகின்றமை, வாங்குகின்றமை, நிதிச் சேவைகள், தொழில்நுட்ப பயிற்சி, ஆலோசனை, அணுத் திட்டத்துடன் தொடர்புடைய பொருள்களை சேவைகள் அல்லது உதவி தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் உற்பத்தி, கையகப்படுத்தல் பராமரிப்பு, சேகரிப்பு, சேமிப்பு, போக்குவரத்து, பரிமாற்றுதல்அல்லதுபயன்படுத்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வட கொரியா அதன் அணுசக்தி மற்றும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைத் திட்டங்களுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி, அனைத்துலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் அனைத்து அணுசக்தி ஆயுதங்களையும், ஏற்கனவே இருக்கும் அணுசக்தித் திட்டங்களையும் கைவிடும் வரையில் இந்தத் தடை பொருந்தும்.

வடகொரியாவின் கப்பல்களுக்கான தரிப்புச் சேவைகள், விநியோகம், சேவை, குத்தகைக்கு விடுதல், கப்பல்களை வாடகைக்கு அமர்த்தல், அல்லது மாலுமிகளுக்கான சேவைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளன.

வடகொரிய நிதி நிறுவனங்கள் இலங்கையில் புதிய கிளைகள், துணை நிறுவனங்கள், பிரதிநிதிப் பணியகங்களை அமைக்கவும் அனுமதிக்கப்படமாட்டா.

இந்த ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்த நியமிக்கப்படும் தகுதிவாய்ந்த ஆணையம், வட கொரிய இராஜதந்திரிகளை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்ய அதிகாரத்தையும் பெற்றிருக்கும் என்றும் சிறப்பு வர்த்தமானி அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. (க)

வெளிநாட்டு வர்த்தக வங்கியில் சூறையாடல்

இலங்கையர் இருவர் கைது

தாய்வான் வர்த்தக வங்கிக் கட்டமைப்புக்குள் ஊடுருவி பல மில்லியன் டொலர்களைச் சூறையாடிய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவரை எதிர்வரும் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சர்வதேசசைபர் குற்றவாளிகள் மற்றும் சைபர் தாக்குதலுக்காக, இந்த இரு இலங்கையர்களும் உதவி செய்தனர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு இலங்கையரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.தாய்வான் வங்கியில் மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதலின் பின்னர் 13லட்சம் டொலர் இலங்கையின் 3 வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதில் 3 கோடி ரூபா பணத்தை இந்த இலங்கையர்களால் வங்கியில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மேலதிக 9 கோடியை பெற்றுக் கொள்ள வந்த சந்தர்ப்பத்தில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பொலிஸ் குற்ற விசாரணைத் திணைக்களம், தாய்வான் பொலிஸ் மற்றும் விசாரணைப் பிரிவுகளுடன் இணைந்து விசாரணை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இந்த சைபர் தாக்குதலின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெருந்தொகை டொலர்கள், இலங்கை, அமெரிக்கா உட்பட பல நாடுகளின் வங்கிக் கணக்குகள் பலவற்றில் வைப்பிடப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது.

புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளியை ரவி கருணாநாயக்கவே உயர்த்தினார்!

பந்துல குணவர்தன குற்றம் சுமத்துகிறார்

கொழும்பு, ஒக். 10

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெட்டுப் புள்ளிகளை, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உயர்த்தினார் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றம் சுமத்தி உள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாவட்ட மட்ட வெட்டுப் புள்ளிகள் மிகவும் அதிகளவில் உயர்த்தப்பட்டுள்ளன.

இவ்வாறு வெட்டுப் புள்ளிகள் உயர்த்தப்பட்டமைக்கான பொறுப்பை முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவும், தற்போதைய அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட யோசனையில் நான் கல்வி அமைச்சர் என்ற ரீதியில் புலமைப் பரிசில் பரீட்சை கொடுப்பனவு நலன்பெறும் மாணவர் எண்ணிக்கையையும் தொகையையும் அதிகரிப்பதற்கு பரிந்துரை செய்திருந்தேன்.

எனினும், அதன் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மைத்திரி அரசு இந்த யோசனையை அமுல்படுத்துவதற்குத் தவறியுள்ளது.

இதேவேளை, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடையும் மாணவர் தொகையை 15 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் ரூபாவாக உயர்த்தினால் அதிகளவு மாணவர்கள் நலன் பெற்றுக்கொள்வார்கள் என்றும் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதரகம் நேற்று மூடப்பட்டது!

கொலம்பஸ் தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் நேற்று மூடப்பட்டுள்ளதுஎனஅமெரிக்கத்தூதரகம்அறிவித்துள்ளது.

கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தார்.1492ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவில் தரையிறங்கி இருந்தார்.

இதனை முன்னிட்டு அந்தத் தினம் கொலம்பஸ் தினமாக அமெரிக்கர்களால் கொண்டாடப்படுகிறது. கொலம்பஸ் தினம் ஒக்ரோபர் 12ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும், ஒக்ரோபர் மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமை அந்தத் தினம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சகல வாகனங்களின் போக்குவரத்திலும் புதிய மாற்றம்

கொழும்பு, ஒக். 10

இலங்கையில் உள்ள சகல வாகனங்களின் போக்குவரத்திலும் புதிய மாற்றம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த மாற்றத்தின் பிரகாரம் அனைத்து வாகனங்களும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவுள்ளன. வாகனம்எங்கே செல்கிறது என்ற தகவலை அடிப்படையாக வைத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவிருக்கிறது.

இதன்படி, புதிய இலத்திரனியல்சிப்ஒன்றைவாகனங்களில் பொருத்தி அவற்றைக் கண்காணிப்பதற்காக அறிமுகம் செய்யவுள்ளதோடு இந்த புதிய நடைமுறையை எதிர்வரும் வருடத்திலிருந்து அமுலுக்குக் கொண்டுவர மோட்டார் வாகனத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக வாகனத்தின் அனைத்துஇயக்கங்களினதும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய 'GPS சிப்' பொருத்தப்பட்ட ஸ்டிக்கர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

மேலும், இந்தச் சிப்பில் வாகனத்தின் அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்பட உள்ளன என்ற நிலையில் பிரதான இலக்கத் தகட்டுக்கு மேலதிகமாக இந்த சிப் பொருத்துவது கட்டாயமாக்கப்படவிருக்கிறது.

இந்த புதிய நடைமுறையின்மூலம் இலங்கையில் பல்வேறு குற்றங்களை மேற்கொண்ட பின்னர் தப்பிச் செல்லும் வாகனங்களை விரைவில் கண்டுபிடித்து விடலாம் எனக் கூறப்பட்டுள்ளது. (க)

காலைக்கதிர் Kalaikkathir

மீண்டும் டெங்கு நுளம்பு தலைதூக்கும் அபாயம்!

கொழும்பு, ஒக். 10 நாட்டில் மீண்டும் டெங்கு நுளம்பு தலை தூக்கும் அபாயம் காணப் படுவதாக சுகாதார அமைச் சின் தேசிய டெங்கு ஒழிப் புப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் தென்மேற்குப் பிரதேசத்தில் நிலவும் மழையுடன் கூடிய கால நிலை நுளம்புப் பெருக்கத் திற்கு சாதகமாக அமைந் துள்ளதாக டெங்கு ஒழிப் புப் பிரிவு சுட்டிக்காட்டி யுள்ளது. (க)

தினசரி ராசி பலன் 10.10.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. பஞ்சமித் திதி பகல் 11.38 மணிவரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம் ரோகினி பகல் 12.08 மணிவரை. பின்னர் மிருகசீரிடம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

ராகுகாலம் - *மாலை 2.56 மணிமுதல் 4.25 மணிவரை.*

சுபநேரம் - *பகல் 10.33 மணிமுதல் 12.03 மணிவரை.*

திவசம் செய்ய வேண்டிய திதி- *புரட்டாதி மாத தேய்பிறை ஷஷ்டி.*

பிறந்த நட்சத்திர வழிபாடு: *ரோகினி.*

'ஜோதிமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம் : யோகமான நாள். தனலாபம் பெருகும். கௌரவப் பதவிகள் தேடிவரும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும். வேலை தேடுவோருக்கு அரச வேலை கிடைக்கும்.

ரிஷபம் : இன்பமான நாள். தனவரவு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். உறவினர்கள், நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

மிதுனம் : அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியாக அலைய வேண்டி இருக்கும். சிலர் உடலாரோக்கியம் பாதிப்படைந்து மருத்துவ உதவியை நாடுவர். கொடுத்த பணத்தை மீளப்பெற முடியாமல் போகும்.

கடகம் : சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து விலையுயர்ந்த பரிசுப் பொருள்கள் வந்துசேரும்.

சிம்மம் : சம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் இழுபறியில் இருக்கும். தேகசுகம் ஓரளவு சீராக இருக்கும். வியாபாரத்தில் லாபம் குறையும்.

கன்னி : மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்ற மடையும். வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி அடையும். உத்தியோகத்தில் உயர்வுகள் கிடைக்கும். அறிஞர்களின் நட்புக் கிடைக்கும்.

துலாம் : கவலையான நாள். பணவரவு குறையும். சுயதொழிலில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்; ஆதாயம் குறையும். திருமணப் பேச்சுகள் குழம்பிய நிலையில் இருக்கும். வியாபாரத்தில் பெரும் நட்டம் ஏற்படும்.

விருச்சிகம் : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். எண்ணிய கருமங்கள் தாமதமாகும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தால் சுமாரான லாபம் கிடைக்கும்.

தனுசு : யோகமான நாள். பணவரவு அதிகரிக்கும். அரசால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் திருமண நிகழ்ச்சிகள் சுபமாய் முடியும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும்.

மகரம் : ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். கடன் பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். சிலர் புதிய தொழில் தொடங்குவார்கள்.

கும்பம் : சஞ்சலமான நாள். மனதில் இனம் புரியாத கவலை உண்டாகும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை கூடும்.

மீனம் : சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். அளவுக்கதிகமான செலவுகள் உண்டாகும். தேகசுகம், குடும்பசுகம் ஓரளவு சீராக இருக்கும். வியாபாரத்தில் லாபம் குறையும்.

சந்திராட்டமநாள்: சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங் களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

விமானப் படைக்கு நவீனரக விமானங்கள்; அமைச்சரவையிடம் அனுமதி கோரல்

18 விமானங்கள் கொள்வனவு என்பது ஊடகத் தகவலே!

இலங்கை விமானப் படைக்கு புதிதாக நவீனரக விமானங்களை கொள்வனவு செய்ய அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

எனினும் புதிய விமானங் களை வாங்க விமானப்படை விசேட கோரிக்கைகளை முன் வைக்கவில்லை என விமானப் படை தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப் படைக்கு புதிதாக 18 விமானங் களை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள நிலை யில் இது குறித்து விமானப் படை ஊடகப் பேச்சாளர் கிஹான் செனவிரத்னவிடம் வினவிய போதே அவர் இத னைக் குறிப்பிட்டுள் +ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

இலங்கை விமானப்படை வருடாந்தம் தமது விமானங் கள் தொடர்பிலான அறிக் கையை பாதுகாப்பு அமைச் சிற்கு சமர்ப்பிப்பது வழமை யான ஒன்றாகும்.

பழைய விமானங்களை திருத்தவும் தேவைப்படும் பட்சத்தில் புதிய விமானங் களை வாங்கவும் நாம் எமது தரப்பில் அறிக்கை வழங்கு வோம். எனினும் அவசரமாக 18 விமானங்களை கொள்வனவு செய்யவேண்டும் என விமா னப் படை ஒரு போதும் தெரி விக்கவில்லை. அதற்கான அவசியம் இப்போது இல்லை.

பழுதடைந்துள்ள சில விமானங்களை திருத்த வேண் டும் என்ற கோரிக்கை உள்ளது. அதேபோல் பழைய விமானங் களை புதுப்பிக்க வேண்டும். அதற்கான தேவைகள் உள்ளன.

அமைச்சரவையில் இந்த விவகாரம் தொடர்பில் கலந் துரையாடப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது.

எனினும் உறுதியாக எம் மால் இந்த விடயத்தில் எதனை யும் குறிப்பிடமுடியாது. அதே போல் 18 புதிய விமானங்களை கொள்வனவு செய்ய அரசு தீர்மானம் எடுத்துள்ளதாக உத்தியோகபூர்வமாக இது வரையில் எமக்கு எந்த தகவல் களையும் அனுப்பவில்லை. தவறான கருத்துக்களை ஊட கங்களில் அவதானிக்க முடி கின்றது.

அதேபோல், குறிப்பிட்ட சில நாடுகளின் பெயர்களை சுட்டிக்காட்டி அந்த நாடுகளில் இருந்து விமானங்களை கொள் வனவு செய்யவும் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக கூறப்படு கின்றது.

அதிலும் இன்னும் உறுதி யான தீர்மானம் இல்லை. எமக்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் கேள்வி கோரலுக்கு விடப்பட்டு அதன்மூலமாகவே தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், இலங்கை யின் தேசிய பாதுகாப்பு நிலை மைகளின் அடிப்படையில் கடல்சார் கண்காணிப்பை மேற்கொள்வதற்கான விமா னங்கள் தற்போது இலங்கை விமானப்படைக்குத் தேவைப் படுகிறது என்றும் அதற்காகவே புதிய ரக 18 விமானங்களை கொள்வனவு செய்ய இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என் றும் சில சர்வதேச ஊடகங்கள் மற்றும் இலங்கையின் ஊட கங்கள் கருத்துக்களை வெளி யிட்டுள்ளன.

இலங்கை விமானப் படைக்கு அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, ரஷ்யா, உக்ரேன் ஆகிய நாடுகளிடம் இருந்து விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

தற்போது கேள்விப் பத்திரங் களுக்கு அமைய சில நாடுகள் விமானங்களை வழங்க முன் வந்துள்ளன என்றும் தெரிய வருகிறது. (க)

ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான வன்முறை; தேரர் உட்பட 7 பேருக்கும் மறியல் நீடிப்பு!

கல்கிஸையில் தங்கவைக் கப்பட்டிருந்த மியன்மார், ரோஹிங்யா முஸ்லிம் அகதி களின் வீட்டுக்கு முன்னால் வன்முறையில் ஈடுபட்டார் கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்த 7 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றப்புலனாய் வுப் பிரிவினரால் அக்மீமன தேரர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களை நேற்று மீண்டும் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தியபோது, அவர்களுக்கான விளக்கமறி

யல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நீதிமன்றத்தால் நீடிக் கப்பட்டுள்ளது.

கடல்மார்க்கமாக 30 ரோஹிங்யா முஸ்லிம் அகதி கள் இலங்கை நோக்கி வந்த நிலையில் நீதிமன்ற தீர்ப்பின் படி அவர்கள் கல்கிஸையில் உள்ள வீடொன்றில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், அவர்கள் தங்க வைக்கப்பட்ட வீட்டிற்கு முன்னாள் பிக்குகள் உட்பட சிலர் வன்முறையில் ஈடுபட் டதுடன் அவர்களை அங் கிருந்து வெளியேறுமாறும் கோஷம் எழுப்பினர்.

இதையடுத்து அவர்களின் பாதுகாப்புக் கருதி பொலிஸார் அவர்களை அங்கிருந்து அப் புறப்படுத்தியதுடன் பூஸா தடுப்பு முகாமில் கொண்டு சென்று அவர்களுக்கு அடைக் கலம் கொடுக்கப்பட்டது.

இந்த கல்கிஸை வீட்டிற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவரும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட வண. அக்மீமன தயாரத்ன தேரர் உட்பட 7 பேருக்கே விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான இலவச யோகா; வல்வெட்டித்துறையில் வகுப்பு

வல்வெட்டித்துறையில் பெண்களுக்கான இலவச யோகா வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன. தமிழகத்தில் யோகா கலையை பயின்ற திருமதி சியாமளா சிவனேசன் வகுப்புகளை நடத்தி வருகிறார்.

வல்வை - ரேவடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றுவரும் யோகா பயிற்சியில் 14 முதல் 70 வயது வரையானோர் யோகா கலையை பயின்று வருகின்றனர்.

பயிற்சிகள் ஒவ்வொரு திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (இ)

டக்ளஸ் தலைமையில் இன்று கலந்துரையாடல்

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத் தின் வர்த்தகர்கள் அண்மைக் காலமாக எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான கலந் துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகத் தில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைமை யில் இடம்பெறும். (இ)

ஸ்ரீ.நதிபரன்

கல்விப்புலத்தில் சாதனை புரியும் மாணவரை பாராட்டுதலும் உளநல ரீதியான மாறுதல்களும்!

சாதனை என்பது செயற்கரிய செயலைச் செய்தல் என்பதாகும். சமகாலத்தில் சாதனை புரிபவர்களைப் பாராட்டுதலென்பது வழமையான வழக்காறாக அமைந்துவிட்டது. பொதுவில், சிறியவர்கள் முதற்கொண்டு பெரியவர்கள் ஈறாகப் பாராட்டு மழையில் நனைவதற்கு ஏங்கிநிற்கின்றமை வெளிப்படை. ஒருவர் செய்த நற்செயல்களை– செயற்கரிய செயல்களை – பிறர் பாராட்டுகையில் மனம் அகமகிழ்வு கொள்ளும் என்பது பொதுப் படையான உளவியல் உண்மை.

விஞ்ஞானத்தின் விந்தைகள் நிகழ்ந்திடும் நவயுகத்தில் கல்வி, அரசியல், பொருளாதாரம், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பல் தளப்பரிமாணத்தில் பல்வேறு சாதனைகள் நிகழ்ந்து வருகின்றன. இந்தத் துறைகளில் புரட்சியை ஏற்படுத்துகின்ற சாதனை மனிதர்களைப் பாராட்டுதல் இயல்பானது. இந்தப் பாராட்டுதல்கள் யாவும் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் மக்கள் சமூகத்துக்கு, நாட்டுக்கு நன்மையளிப்பவையாக இருக்கவேண்டுமே ஒளிய அவர்கள் ஆளுமையைப் புகழ்வதாக – பாராட்டுவதாக – இருத்தலாகாது.

பாராட்டுதல்கள் வருங்காலத் தலைமுறைக்கு ஊக்கியாக அமைகின்றமையை உறுதிப்படுத்துதல் அவசியம். அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பட்டம் பெறுவதற்கும் புகழடைவதற்கும் பாராட்டுகளில் திளைப்பதற்கும் சிலர் அலைந்து திரிகின்றமையைக் காணலாம். இவற்றை அடைவதற்காக இவர்கள் பின்பற்றி வருகின்ற வழிமுறைகள் அவர்களது குறுகிய மனப்பான்மையை–சமூகவெறுமைநிலையை வெளிப்படுத்தி நிற்கின்றது. தற்கால அறிவியல் யுகத்தில் வாழ்ந்துவரும் நாம், மூக்கில் விரலை வைக்குமளவிற்குப் புதிய கண்டுபிடிப்புகள் உச்சம் தொட்டு நிற்கின்றன.

இத்தகையவாறான கண்டுபிடிப்புகளை மேற்கொள்வோர் சமூக நன்நோக்கம் கருதியே தமது ஊழியத்தை மேற்கொள்கின்றனர். இவ்வாறானவர்கள் மூலம் உலகம் பல்வேறு விதமான நன்மைகளை அறுவடை செய்து வருகின்றது. பாராட்டுதல்கள்; பெறவேண்டும் என்பதற்காக மட்டும் தமது சாதனைகளை ஒருபோதும் இவர்கள் நிகழ்த்துபவர்கள் அல்லர்.

சர்வதேச உளநல தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

தமது முயற்சியால் மக்கள் நன்மை அடைய வேண்டும் என்ற இலட்சியக் கனவு இவர்களது சாதனைகளில் இழையோடி இருப்பதைக் காணமுடியும். ஆனால், எம்மவர்களோ சுயலாபம் கருதி பாராட்டுப் பெறுவதற்காகக் குறுக்கு வழிகளில் ஆதாயம் தேடிவருகின்றமை துரதிஷ்டவசமானதாகும். இதற்கான முகாந்திரத்தைத் தேடினால் சிறுபராயத்தில் – வளரிளம் பருவத்தில் – அவர்களது ஆளுமைகளில் பெற்றோர், உறவுகள் மற்றும் வாழும் சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட எதிர் வினைகளின் பிரதிபலிப்பாக இன்றைய வளர்ந்தவர்களின் நடத்தைக் கோலங்களில் எதிர்வினையாற்றி வருகின்றன என்பது உளவியலாளர்களின் கருத்தாக உள்ளது.

இது விடயமாக, தற்கால மாணவர்கள் கல்விப்புலத்தில் நிகழ்த்தும் சாதனைகளைப் பாராட்டுதல் பற்றிய புரிதலை இப்பத்தி வெளிப்படுத்திச் செல்கின்றது.

நாட்டில் நடைமுறையிலுள்ள கல்வி முறையின் சமகாலப் போக்குகளை அவதானிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றமையைச் சுட்டியுரைக்கலாம். கல்வியியலாளர்களும் கல்விக் கொள்கை வகுப்பாளர்களும் காலத்திற்கேற்றவாறான கல்விக் கொள்கைகளை வகுக்காது, அடிக்கடி பாடத்திட்டங்களை மாற்றுவதிலேயே காலந்தள்ளுவதால் இங்கு 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது' என்ற பழமொழி மீண்டும் மெய்ப்பிக்கப்படுகிறது. மாணவர்களின் கற்றலுக்கான தடையற்ற சுதந்திரம் மறுக்கப்பட்டு, திணிப்பு முறையிலான கல்வியூட்டலே முதன்மை பெறுகின்றது.

பரீட்சையில் உயர்பெறுபேற்றைப் பெறுதல் என்ற ஒற்றை நோக்கை அடிப்படையாகக் கொண்டு, பெற்றோர்களின் கனவு மெய்ப்படவேண்டும். ஆசிரியர்களின் ஆசைகள் நிறைவேற வேண்டும். எல்லோரும் பாராட்ட வேண்டும். போன்றதான சிறுமைத்தனமான நோக்கங்களை அடைவதை நோக்காகக் கொண்ட தூரநோக்கற்ற கல்விமுறை காணப்படுகின்றமை எம் சமூகத்தின் சாபக்கேடன்றி வேறில்லை. எடுத்துக்காட்டாக, தரம் 5 மாணவர்கள் எதிர்கொள்கின்ற புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்களைப் படுத்தும்பாடு சொல்லுந்தரமன்று.

இத்தகுநிலையில் வளரிளம் பிராயத்தினராகிய மாணவர்களைப் பாராட்டுகையில் மற்றையவர்களுடன் ஒப்பீடுசெய்து பாராட்டல் மிகவும் தவறான அணுகுமுறையாகும். அது மாணவர்கள் மத்தியில் பாரதூரமான எதிர்வினைகளை ஏற்படுத்தும். நீ அவனை விடவும் கெட்டிக்காரன்; நல்லவன்; அமைதியானவன்; ஒழுக்கமுள்ளவன்; திறமைசாலி இந்தத் தன்மையதான பாராட்டுரைகள் பிள்ளைகளின் மனநிலையில் எதிர்மறையான பிறழ்ச்சிகளை ஏற்படுத்திவிடுகின்றன. இதனால் தன்னைவிட சிறந்தவர்கள் ஒருவரும் இல்லை என்ற அகந்தை இயல்பாகவே உருவாகும். இத்தகைய சுயகர்வம், சக தோழர்கள் மீது வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி, குரோதம், வன்மம், பொறாமை, அபிப்பிராயபேதம் முதலிய பல எதிர்மறையான எண்ணங்களை மனங்களில் தோற்றுவிக்கின்றன.

பிறரை மதிக்கும் பண்பு, சகிப்புத் தன்மை, பிறருக்கு உதவும் மனப்பாங்கு, அன்பு, இரக்கம் முதலியவாறான நற்குணங்கள் மறையத் தூண்டுகோலாகின்றன.

இது ஓட்டப் பந்தயத்துக்காக சவாரி மாடுகளைத் தயார்ப்படுத்தும் நிலைக்கு ஒப்பதாகும். பொதுவாக பரீட்சைக் களநிலைமைகளின் போது மாணவர்களைப் பாராட்டுகின்றமை இயல்பு. பலர் பத்திரிகைகளில் பாராட்டு விளம்பரம் செய்து மாணவர்களை மகிழ்விக்கிறார்கள் எனும் பீடிகையுடன் தமக்கான விளம்பரங்களைத் தேடுவோரும் நம் மத்தியில் இருக்கவே செய்கின்றனர். இதற்கு உதாரணம், ஆசிரியர்கள் சிலர், தம்மிடம் கல்வி கற்ற மாணவர்கள் உயர்ந்த பெறுபேற்றைப் பெறும்போது அவர்களை பத்திரிகைகளில் பிரசுரித்து பாராட்டி வாழ்த்தும் நிலைமைகள் ஆசிரியர்கள் தமக்கான புகழை மறைமுகமாகத் தேடுவதற்கேயாகும். இதற்கு மாணவர்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றனர். அவ்வளவுதான். எது எவ்வாறிருப்பினும், மாணவர்களை பாராட்டுகையில் அவர்களது ஆளுமைகள் பாதிப்புறாதிருப்பதைப் பாராட்டுபவர்கள் கவனமெடுக்க வேண்டியமை அவசியம்.

குறிப்பாக, பதின்ம வயதுக்குக் கீழ் உள்ள வயதுப் பிரிவினரின் ஆளுமைகள் வளர்ச்சிக் கட்டத்தை எட்டியுள்ள தருணத்தில் அவர்களை நேரிடையான முறையில் பாராட்டும் போது அவர்களது ஆளுமைகளில் பிறழ்வுகள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றன என தற்கால உளவியலாளர் கள் கருதுகின்றனர். இதனால் பிள்ளை களது உளப்பாங்குகளில் தாக்கங்கள் ஏற்படுவதுடன், எதிர்காலத்தில் அவர்களது சிந்தனைகளிலும் பழக்க வழக்கங்களிலும் நடத்தைகளிலும் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான அதிகபட்ச சாத்தியங்களிருக்கின்றன என்றும் எதிர்வு கூறியிருக்கின்றனர்.

பிள்ளைகளின் உளவளர்ச்சிப் படிநிலையில் பெற்றோர், ஆசிரியர்கள், வாழும் சமூகம் ஆகிய காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. இயல்பாக எல்லாப் பிள்ளைகளும் ஒரே திறமையுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொருவருக்குள்ளும் சில திறமைகள் ஒளிந்திருக்கின்றன.

பாராட்டுதல்கள் பிள்ளைகளின் மனங்களில் எத்தகையதான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றிய சமகால உளவியலாளர்கள் வெளிப்படுத்தியுள்ள ஆய்வுக் கருத்துக்களை பார்க்கையில், ஒரு பிள்ளையின் ஆளுமைதொடர்பாக நேரடிப்பாராட்டுதல்கள், அந்தப் பாராட்டுதல்களை அந்தப் பிள்ளையால் அப்படியே ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. தன்னைப்பற்றிய சுயபார்வை – சுயமதிப்பிடல் – சுய அபிப்பிராயம் வேறானதாக இருக்கின்றமையை உணரும்போது அவற்றை உண்மையென நிரூபிப்பதற்காக சில வேளை மோசமாக நடந்து கொள்கிறது. தன் பார்வையில், தான் நல்லபிள்ளையில்லை என்று உணரத் தலைப்படுகையில் பிற்காலத்தில் தனது உள்ளக பிம்பத்தை வெளிப்படுத்துவதற்கு இயல்புக்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டப்படுகின்றது.

இந்தச் செயற்பாடுகள் தன்னைப் பற்றிய வெளியுலக அபிப்பிரயங்களை வெளிப்படுத்த எத்தனிக்கின்றது. தற்சார்புள்ள புகழ்ச்சிகள் ஒருவித மன மருட்சியையும் அங்கலாய்ப்பையும் எதிர்பார்ப்புகளையும் எதிர்காலத்தில் தோற்றுவிக்கின்றன. இந்நிலையில் தனது இயல்பான உளச்சொருபம் உடைந்து, தனது உண்மையான இயல்புகள் வெளிப்பட்டு விடுமோ என்கின்றவாறான ஒருவித அச்சம் அவர்கள் மனங்களில் எப்போதும் குடைந்தபடியிருக்கும் என்கிறார்கள். (12 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

தொகுப்பு: வொன்.வேணு கிருஷ்ணா

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் மற்றும் பர்மாவில் (மியன்மார்) அவர்களது முக்கிய அரசியல் கருவியாக செயற்பட்டுவரும் ஆங் சான் சூ கீ ஆகியோரால் நடைமுறைப்படுத்துவரும் மனித உரிமைகள் ஏகாதிபத்தியத்தின் மோசடியினால் உருவான ஒரு பேரழிவுகர வெளிப்பாடு

மேற்கத்திய மாநிலமான ராகினில் மியன்மார் இராணுவ வெறியாட்டத்தில் இருந்து தப்பித்த நூறாயிரக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்களின் அவல நிலையானது, அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் மற்றும் பர்மாவில் (மியன்மார்) அவர்களது முக்கிய அரசியல் கருவியாக செயற்பட்டுவரும் ஆங் சான் சூ கீ ஆகியோரால் நடைமுறைப்படுத்திவரும் மனித உரிமைகள் ஏகாதிபத்தியத்தின் மோசடியால் உருவான ஒரு பேரழிவுகர வெளிப்பாடு ஆகும்.

மேலும் சூ கீ ஐ ஒரு ஜனநாயக சின்னமாக ஊக்குவித்தவர்களதும் மற்றும் ஐ.நா.வினதும் பெரும் பாசாங்குத்தனத்தை எடுத்துக்காட்டும் தறுவாயாக இந்த இராணுவ நடவடிக்கைகளின் இந்தக் கொடூரமும் அளவும் இருந்து வந்தது. ஊடகமும் மனிதாபிமான அமைப்புகளும் செயற்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்குத் தடைசெய்யப்பட்ட போதிலும், மியன்மார் இராணுவம் கிராமங்களை திட்டமிட்டு சித்திரவதை செய்து வருவது, மேலும் குடிமக்களை சிப்பாய்கள் சுட்டு வீழ்த்தி வருவது ஆகியவை குறித்த எண்ணற்ற சாட்சியங்களுக்கு கணிசமான மற்றும் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ், ராகினியில் நிகழ்ந்து கொண்டிருந்ததை ‘இன அழிப்பு’ என்பதாக விவரித்ததோடு, ‘‘ரோஹிங்யாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் நாட்டை விட்டு வெளியேற நேரிட்டதை விவரிப்பதற்கு ஒரு சிறந்த வார்த்தையை நீங்கள் கண்டுபிடிக்க முடியுமா?’’ என்றும் கேள்வி எழுப்புகிறார். ஐ.நா. பாதுகாப்புச் சபை வெளியிட்ட ஒரு அறிக்கை, ‘‘அதிகப்படியான வன்முறை குறித்த அறிக்கைகள் பற்றி கவலையை வெளிப்படுத்தியது’’, மேலும் ‘‘நிலைமை இன்னும் மோசமடையாதிருக்கவும்’’, குடிமக்களை பாதுகாக்கவும் மற்றும் அகதிகள் பிரச்சினையை தீர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கவும் முறையீடு செய்தது.

இராணுவத்தின் இந்த இன அழிப்பு ஒரு தசாப்தத்திற்கு முன்னர் மியன்மார் இராணுவ ஆட்சி சூ கீ ஐ வீட்டுக் காவலில் வைத்திருந்தபோது நடந்திருந்தால், அதற்கான எதிர்வினை மிகவும் வித்தியாசமாக இருந்திருக்கக்கூடும். மோசடி ஆட்சியின் மேற்கத்திய ஏகாதிபத்தியத்தில் இருந்து கண்டனங்களும், மனித உரிமை மீறல்கள் பற்றிய அதன் நீண்ட வரலாற்றின் பழிப்புரைகளும் எழுந்திருக்கக்கூடும்.

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி போரிஸ் ஜோன்சன், இராணுவத்தைக் கட்டுப்படுத்துவதில் சூ கீ அவரது செல்வாக்கை பயன்படுத்த வேண்டுமென்று முன்வைக்கப்படும் சர்வதேச கூட்டு அழைப்பில் தானும் இணைந்தார். ‘‘ஆங் சான் சூ கீ நமது தலைமுறையின் மிகவும் உற்சாகமூட்டும் நபர்களில் ஒருவராக சரியாக கருதப்படுகிறார். என்றாலும் ரோஹிங்யாவின் நடை

முறை மியன்மாரின் கீர்த்தியை அவமதிப் பதாகவுள்ளது’’ என்றவர் அறிவித்தார்.

இராணுவத்தின் இந்த இன அழிப்பு ஒரு தசாப்தத்திற்கு முன்னர் பர்மிய இராணுவ ஆட்சி சூ கீ ஐ வீட்டுக் காவலில் வைத்திருந்தபோது நடந்திருந்தால், அதற்கான எதிர்வினை மிகவும் வித்தியாசமாக இருந்திருக்கக் கூடும். ‘‘மோசடி ஆட்சியின்’’ மேற்கத்திய ஏகாதிபத்தியத்தில் இருந்து கண்டனங்களும், மனித உரிமை மீறல்கள் பற்றிய அதன் நீண்ட வரலாற்றின் பழிப்புரைகளும் எழுந்திருக்கக்கூடும், மேலும் மியன்மாருக்கு எதிராக கடுமையான இராஜதந்திர மற்றும் பொருளாதாரத் தடைகள் குறித்த நகர்வுகளும் இருந்திருக்கும்.

மியன்மாரில் நிகழ்ந்த சமீபத்திய இராணுவ கொடுஞ்சயல்கள் குறித்து வொஷிங்டன் இப்போது எப்படி மென்மையான மெத்தனப்போக்கினைக் கொண்டுள்ளது?

மியன்மாரில் நிகழ்ந்த சமீபத்திய இராணுவ கொடுஞ்செயல்கள் குறித்து வொஷிங்டன் இப்போது எப்படி மென்மையான மெத்தனப்போக்கினைக் கொண்டுள்ளது? உலகம் முழுவதிலுமான பிரச்சினையாக இருக்கின்ற நிலையில், மியன்மாரில் அடிப்படை ஜனநாயக உரிமைகளை வளர்ப்பதில் அமெரிக்கா ஒருபோதும் சிறிதும் அக்கறை காட்டவில்லை. மாறாக பர்மிய இராணுவ சர்வாதிகாரத்தின் மீதான அதன் அணுகுமுறை எப்போதும் பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களால் அதிலும் குறிப்பாக, சீனாவுடனான ஆட்சிக்கு நெருக்கமான உறவுகள் மீதான வொஷிங்டனின் விரோதத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

ஒபாமா நிர்வாகம் ஆசிய பசிபிக் முழுவதும் சீனாவிற்கு எதிராக அதன் ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பு கொள்கையை வலுப்படுத்த தொடங்கிய நிலையில், மியன்மாரில் இராணுவ ஆட்சி, உள்நாட்டில் பெருகியதொரு பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியை எதிர்கொள்வதானது, 2011 இல் பெய்ஜிங்கில் இருந்து ஒரு மாற்றீட்டிற்கும், மேலும் சூ கீ மற்றும் அவரது ஜனநாயகத்திற்கான தேசியக் கழகத்திற்கும் (National league for Democracy - NLD) ஓர் அரசியல் பாத்திரத்தைக் கண்டுபிடிப்பதற்கான அதன் விருப்பத்தையும் அடையாளம் காட்டியது.

ஒரு திடீர்திருப்பம் நிகழ்ந்தது போன்று இருந்தது. கிட்டத்தட்ட ஒரே இரவில், அமெரிக்கா மற்றும் சர்வதேச ஊடகங்கள் மியன்மாரை ஒரு போக்கிரித்தனமான அரசு என்றெல்லாமல், மாறாக ஒரு வளரும் ஜனநாயகம் என்று நியமித்தது.

ஒரு திடீர்திருப்பம் நிகழ்ந்தது போன்று இருந்தது. கிட்டத்தட்ட ஒரே இரவில், அமெரிக்கா மற்றும் சர்வதேச ஊடகங்கள் மியன்மாரை ஒரு போக்கிரித்தனமான அரசு என்றல்லாமல், மாறாக ‘ஒரு வளரும் ஜனநாயகம்’ என்று நியமித்தது. 2012 இல் ஜனாதிபதி பராக் ஒபாமா வருகையின் உச்சக்கட்டத்தில் உயர்மட்ட அமெரிக்க அதிகாரிகளின் தொகுப்பு ஒன்று அங்கு உருவானது. இந்நிலையில் பொருளாதாரத் தடைகள் படிப்படியாக கைவிடப்பட்டன என்பதோடு, சூ கீ இராணுவ ஆட்சியின் நடமாடும் தூதராகி முதலீட்டிற்கும் நிதி உதவிக்கும் வற்புறுத்தினார்.

2016 இல் கவனமாக நிர்வகிக்கப்பட்ட தேர்தல்களில் NLD இன் வெற்றி மற்றும் சூ கீ அரசாங்கத்தின் உண்மையான தலைவராக நியமனம் செய்யப்பட்டது ஆகியவை குறித்து ஜனநாயகம் மலர்வதாக கருதப்பட்டு ஸ்தாபக ஊடகங்கள், நடுத்தர வர்க்க தாராளவாதிகள் மற்றும் பல்வேறு போலி-இடது அமைப்புகளால் உலகளாவிய வரவேற்பைப் பெற்றது. உண்மையில், தொடர்ந்து இராணுவம் பொறுப்பில் உள்ளது: நாடாளுமன்றத்தில் கால் பகுதி இடங்களுக்கான அதிகாரிகளை அது நியமித்தது, மேலும் பாதுகாப்பு, உள்நாட்டு விவகாரங்கள் மற்றும் எல்லைப்புற விவகாரங்கள் ஆகியவற்றிற்கான பிரதான அமைச்சரவை பதவிகளுக்கான படைத் தளபதிகளையும் அதுவே நியமித்தது.

சூ கியும் NLD யும், அவர்களது அடிப்படை அக்கறை ஜனநாயக உரிமைகள் போன்றவவை குறித்து ஒரு போதும் இல்லை என்பதால் இந்த விடுகதையோடு இணைந்தே சென்றனர். மாறாக இராணுவ ஆட்சியின் கீழ் தங்களது பொருளாதார நலன்களை திணித்து வைத்துள்ள மியன்மாரின் முதலாளித்துவ வர்க்கத்தின் அந்த பகுதிகளை NLD பிரதிநிதித்துவம் செய்கின்றது. மேற்கத்திய ஏகாதிபத்தியத்துடன் ஒழுங்குபடுத்திக் கொண்டு, முதலீடு செய்வதற்கேற்ற வகையில் நாட்டை ஏற்புடையதாக்க முனைந்தனர்.

மேலும், சூ கீ உள்ளடங்கலாக NLD உம் உழைக்கும் மக்களிடையே மத மற்றும் இன பிளவுகளை விதைப்பதை மீண்டும் மீண்டும் சுரண்டுகின்ற தான மியன்மார் பௌத்த மேலாதிக்கத்தின் பிற்போக்குத்தனமான சித்தாந்தத்தில் ஊறிய இராணுவத்தை போன்றே பிரதிபலிக்கின்றன. மியன்மாரில் ஒரு பொருளாதார மலர்ச்சிக்கான நம்பிக்கைகள் மறைந்துவிட்ட நிலையில், இராணுவம் NLD இன் ஆதரவோடு, நாட்டின் பிரச்சினைகளுக்கு நீண்ட காலமாக ஒரு பலியாடாக பயன்படுத்தப்பட்டு வந்த முஸ்லிம் ரோஹிங்யாக்களுக்கு எதிராக வன்முறையை அதிகரித்துள்ளது.

சூ கீயும் NLD யும், பங்களாதேஷில் இருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்று முத்திரையிடப்பட்டுள்ள ரோஹிங்யா சிறுபான்மையினருக்கு அடிப்படை உரிமைகள் கூட இல்லாதது குறித்து பரிந்துரைக்க எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மியன்மாரில் பல தலைமுறைகளாக வாழ்ந்தாலும், பல சந்தர்ப்பங்களில், அவர்கள் குடிமக்களாகக் கருதப்படுவது இல்லை, என்பதோடு அவர்களுக்கு சமூக சேவைகளை பெறுவதற்கோ அணுகுவதற்கோ எந்தவித உரிமைகளும் கிடையாது.

(கேள்வி தொடரும்)

சுதந்திர வேட்கை

அத்தியாயம் - VII

மாத்தையாவும் மக்கள் முன்னணியும்

1993 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஒருநாள். வெப்பமும் புளுக்கமுமான இரவு 10 மணி இருக்கும். விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவரும் மக்கள் முன்னணித் தலைவருமான மகேந்திர ராசா (மாத்தையா) யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியிலுள்ள எமது வீட்டுக்குள் திடீரென்று நுழைந்தார். எமது வீட்டிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் போகிறார் என வும் அதற்கு ஓர் அறையை ஒதுக்கித் தருமாறும் வேண்டினார்.

அங்கலாய்ப்புடனும், பதற்றத்துட னும் அவர் காணப்பட்டார். சாரமும் சேட்டுமாக சாதாரண உடை அணிந் திருந்த மாத்தையா, தனக்குத் தேவை யான சில பொருள்கள் அடங்கிய சிறு பை ஒன்றையும் காவி வந்தார். எமது வீட்டுக்குள் நுழைந்த கணத்திலிருந்தே தான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து விட்டார் எனக் கூறினார். மாத்தையாவின் முகத்தில் ஒரு கடுப்புத் தென்பட்டது. அவரது மெய்ப் பாதுகாவலர்கள் ஆயுத பாணிகளாக எமது வீட்டுக்கு முன்பாகக் குவிந்து நின்றனர். மாத்தையாவின் பஜ்ரோ வாகனம் எமது வீட்டு வெளிவாச லுக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்தது. இந்தத் திடீர் திருப்பத்தால் திகைப் படைந்த எனது கணவர், சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவெடுத் தமையின் காரணம் என்னவென்றும், எமது வீட்டைத் தேர்ந்தெடுத்ததன் நோக்கம் என்னவென்றும் மாத்தையா விடம் வினவினார்.

புலிகள் இயகத்தின் உப தலைவர் பதவியிலிருந்தும், அரசியல் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்தும் தாம் விலக்கப்பட்டமை காரணமாக இயக்கத் தின் தலைமைப் பீடத்திலும், குறிப்பாக பிரபாகரன் மீதும் தாம் ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என மாத்தையா விளக்கினார். இயக்கத் தலைமையின் இந்த முடிவு நியாயமற்றது என்றும், தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறிய அவர், தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவே சாகும்வரை உண்ணா விரதம் இருக்கத் தாம் முடிவு செய்துள் ளார் எனவும் சொன்னார். எமது வீட்டைத் தெரிவு செய்ததன் காரணத்தை விளக் கிய அவர், இயக்கத்தின் தலைவர்களும் தளபதிகளும் மட்டுமன்றி உள்ளூர் பத்திரிகையாளர்களும் எமது வீட்டுக்கு வந்து செல்கின்றமையால், தமது உண்ணாவிரதப் போராட்டம் முழு இயக்கத்துக்கும் பொதுமக்களுக்கும் தெரியவரும் என்றார்.

மாத்தையாவின் வீழ்ச்சிக்கான கார ணங்கள் என்னவென்பதை பாலாவும் நானும் நன்கறிவோம். மக்கள் முன்னணி என்ற இயக்கத்தின் அரசியற் கட்சியை, மாத்தையா ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன்

செம்மையாக வழிநடத்தவில்லை. இதனால், மக்கள் ஆதரவுத் தளத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. கட்சியின் தலைவர் என்ற ரீதியிலும், இயக்கத்தின் உபதலைவர் என்ற ரீதியிலும் மாத்தையா ஒரு சர்வாதிகாரப் போக்கைக் கடைப் பிடித்தமை மட்டுமன்றி, கட்சியின்

பிரபாகரனைக் கொல்லச் சதித்திட்டம்

யாப்பை மீறும் வகையில் தனக்கு அடிவருடிகளாக இருந்தவர்களை அர சியல் அமைப்பின் முக்கிய பொறுப்பு களில் அமர்த்தினார். கிராமிய மட்டத்தி லிருந்து, பிரதேச மட்டம் வரை தேர்தல் முறை மூலமாக கட்சி உறுப்பினர்களும், நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென யாப்பு விதிக்கிறது. இதனால், மாத்தையாவின் நடவடிக்கை, கட்சியின் நிர்வாக அலகுகளை மக்களே தெரிவுசெய்யும்ஜனநாயகவழிமுறைக்கு முரணாக அமைந்ததுடன், மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் நிறுவனமாக மாறி, மாத்தையாவுக்கு விசுவாசமாக ஒரு சில நபர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் நிறுவனமாகக் கட்சி இயங்குவதற்கும் தடையாக இருந்தது. இறுதியில் விடு தலைப் புலிகளின் மக்கள் முன்னணி ஊழல் மிகுந்த நிறுவனமாக மாறி, மாத்தையாவுக்கு விசுவாசமான ஒருசில நபர்களின் அபிலாஷைகளை மட்டுமே பிரதிபலித்தது. பரந்துபட்ட மக்களும் கட்சிமீது ஆத்திரமும் வெறுப்பும் கொண்டனர். இதனால், கட்சியைக் கலைத்துவிடுவதென தலைமைப்பீடம் முடிவெடுத்தது. இதன் விளைவாக கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்தும், இயக்கத்தின் உபதலைவர் பொறுப்பிலிருந்தும் மாத்தையாவிலக்கப்பட்டார். மாத்தையா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முடிவு இயக்கத் தின் மத்திய குழுவாலும், பொதுச்சபை யாலும் மேற்கொள்ளப்பட்டபோதும், மாத்தையா அந்த முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை. தனக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தலைவர் பிரபாகரனின் தனிப்பட்ட விரோதத்தால் மேற்கொள்ளப்பட்டது எனக் கருதிய அவர், அந்த முடிவுக்கு சவால் விடத் தீர்மானித்தார்.

சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டு, இந்தப் பிரச்சினையை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு நாம் இரவிரவாக மாத்தை யாவிடம் மன்றாடிக் கேட்டோம். அடுத் ததாக உண்ணாவிரதப் போராட்டத்தை எமது இல்லத்தில் நடத்துவதற்கு அவர் தீர்மானித்தமையும் எமக்கு திருப்தியை அளிக்கவில்லை. மாறாக, சங்கடத்தைத் தோற்றுவித்தது. உண்ணாவிரதம் எமது வீட்டில் நடைபெற்றால் இயக் கத்துக்கு எதிராக மாத்தையா நிகழ்த்தும் போராட்டத்துக்கு நாமும் துணை நிற் பவர்களாக எம்மீதும் வீணான சந்தேகம் ஏற்படலாம். இதனை மாத்தையாவுக்கும் தெளிவுபடுத்தினோம். இயக்கத்தின் முடிவுக்கு எதிராக ஆட்சேபனை தெரி விக்கும் உரிமை அவருக்கு இருந்த போதும், எமது வீட்டை அதற்காகப் பயன்படுத்தும் உரிமை அவருக்கு இல்லை என்று வாதாடினோம்.இந்த நியாயப்பாட்டை மாத்தையா ஏற்றுக் கொண்டார். இறுதியாக அவரது ஆட் சேபனைக் கடிதத்தை தலைவர் பிரபா கரனிடம் கையளிக்கிறேன் என பாலா வாக்குறுதி கொடுத்தமையை அடுத்து, மாத்தையாவின் உண்ணாவிரத நாடகம் முடிவுக்கு வந்தது. பாலசிங்கம் தம்பதி கள் வீட்டில் ஓரிரவு உண்ணாவிரதம் அனுஷ்டித்துத் தனது ஆட்சேபனை யைத் தெரிவித்துவிட்ட திருப்தியுடன் மாத்தையா தமது மெய்க்காவலர்களு டன் எமது வீட்டை விட்டுப் புறப்பட் டார். மாத்தையாவின் விவகாரத்தைப் பொறுத்தவரை, பின்னர் நாம் அறிந்த பூதாகர சம்பவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்த உண்ணா விரத நிகழ்வு ஒரு சிறிய விடயமே.

ஒரு மாதத்தின் பின்னர், மாத்தை யாவும் அவரது நெருங்கிய தோழர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர். பிர பாகரனைக் கொலைசெய்ய முயற் சித்த சதிக் குற்றச்சாட்டின் பேரில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் இவர்களைக் கைது செய்தனர். இயக்கத்தின் மூத்த தளபதிகளின் வழி நடத்தலில் மானிப்பாயிலிருந்த மாத்தை யாவின் பாசறை, இயக்கப் போராளி களால் சுற்றி வளைக்கப்பட்டு மாத்தை யாவும் அவர்களது தோழர்களும் கைது செய்யப்பட்டனர். இப்படியான திடீர் திருப்பத்தை அறிந்தபோது நாம் மலைத்துத் திகைத்துப் போனோம். அன்று எமது வீட்டுக்கு வருகை தந்த பிரபாகரன் நடந்தவற்றை விளக்கினார். தன்னைக் கொலை செய்துவிட்டு, தலைமையைக் கைப்பற்ற மாத்தையா சதி செய்தார் என்றும், இந்திய வெளி யுறவுப் புலனாய்வுத் துறையான றோ, இந்த சதித் திட்டத்தைத் தீட்டியது என்றும் அவர் சொன்னார். இந்தச் சதித்திட்டத்தின் முழுமையான பரி மாணங்களையும் அறிவதற்கு விசா ரணைகள் நடைபெறுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

(தொடரும்...)

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சீதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்ப மான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக் கத்தின் உட்துக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

121

காலைக்கதிர் Kalaikkathir

மியன்மாரிலும் மூர்க்கத்துடன் தேரவாத பௌத்தம்!

இங்கிலாந்து ஒக்ஸ்போட் கல்லூரியில் படித்து நோபல் பரிசு பெற்றவர்களது உருவப்படங்களைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருக்கின்றமை வழக்கம். அவ்வாறு வைக்கப்பட்ட படங்களில் இருந்து அந்தக் கல்லூரியின் பழைய மாணவி பர்மிய அரசியல் தலைவர் ஆங் சான் சூகீ (Aung san suu kyi) உருவப்படத்தை நீக்கி, களஞ்சியத்தினுள் வைத்து விட்டது அந்த கல்லூரி நிர்வாகம்.

மியன்மாரில் ரோஹிங்யா மக்கள் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றமையும் அரசியல் ரீதியாக அவர்கள் கையாளப்படும் விடயம் தொடர்பாகவும் சர்வதேச நாடுகள் மத்தியில் இருந்து கண்டனஅறிக்கைகள்கிளம்பிஇருக்கும் நிலையில், மியன்மாரின் பிரதான அரசியல் தலைவரான ஆங் சான் சூகீயின் உருவப்படத்தை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் பார்வையாளர் மண்டபத்திலிருந்து நீக்கி விட்டது.

இலங்கையைப் போல தேரவாத பௌத்த நாடுகளில் ஒன்றான மியன்மாரில், பௌத்த சமயத்தின் தலையீடு அரசியலில் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் அங்கமாக உள்ளது. மன்னர் ஆட்சிக்காலத்திலும் காலனித்துவ காலத்திலும் வங்கதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த இஸ்லாமிய மதத்தைத் தழுவும் ரோகிங்யா மக்களுக்கு குடியுரிமை வழங்குகின்றமையை பௌத்த அடிப்படைவாதிகள் தடுத்து வருகின்றனர்.

பௌத்த மதத்தின் செல்வாக்கு அரசியல்பலத்தைத் தீர்மானிப்பதாக இருக்கின்றமையால் உள்நாட்டு அரசியலில் எந்தவிதத் தீர்மானங்களையும் எடுப்பதற்கு ஆங் சான் சூகீயின் தேசிய ஜனநாயகக் கட்சி அரசு தயங்கி வருகிறது என மேலைத்தேய சிந்தனைக் குழு ஒன்றின் ஆய்வாளர் கூறுகின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் அந்தனியோ குத்தரஸ், மியன்மார் படுகொலைகளை இனஅழிப்பு எனக் குறிப்பிட்டிருந்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை பேச்சாளர் தனது குறிப்பில், கடந்த சில தசாப்தங்களில் இந்தப் பிராந்தியத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய மக்கள் இடம்பெயர்வு என்று குறிப்பிட்டிருந்தார்.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்ப், ரோஹிங்யா மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறையைத் தடுக்க மிக விரைவான – கடுமையான – நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையைக் கேட்டுக் கொண்டார் என ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது.

இதர அரசுகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் பாதுகாப்பதாக உள்ளது.

தென்சீனாவுக்கான எரிபொருள் குழாய்களின் இந்து சமுத்திர வாயில், சித்வே துறைமுகத்திலிருந்து ஆரம்பிக்கிறது. சித்வே, ரஹைன் (Rakhine) மாநிலத்தின் தலைநகரமாகும். மியன்மார் அண்மைக் காலமாக இந்து சமுத்திரக் கரையோர ரஹைன் மாநிலத்தை புதிய அபிவிருத்திகளுக்கு உள்ளாக்கியுள்ளது. ஆனால், மேலைத்தேய நிறுவனங்களின் முதலீட்டிலும் பார்க்க சீன முதலீடுகள் மியன்மாரில் குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலைத்தேய சார்பு பரிசான நோபல் பரிசு ஆங் சான் சூகீக்கு வழங்கப்பட்டதற்கான காரணம், சூகீ அம்மையாரின் சீன சார்பு இராணுவ ஆட்சிக்கு எதிராக எண்பதுகளிலும் தொண்ணூறு களிலும் போராடியமையே ஆகும் .

ஆனால், நிலைமை மீண்டும் தலை கீழாக மாறியது. சீனாவின் வெற்றிக்கு வெற்றி (Win Win Economic Diplomacy) பொருளாதார இராஜதந்திரத்தால் ஆங் சான் சூகீ, சீனசார்பு கொள்கையிலிருந்து வெளிவரமுடியாத நிலையை ஏற்படுத்தி உள்ளது.

சீன தரப்பு தென்கிழக்காசியப் பிராந்தியத்திலே கொந்தளிப்பு நிலையைத் தவிர்க்கவே விரும்புகிறது. தெற்கு சீனப் பகுதிக்கான வழங்கல்களைச் சீராக வைத்திருப்பதை நோக்காகக் கொண்டது.தென் சீன நகராக கும்மிங் பகுதியின் வளர்ச்சி இந்த வழங்கல் பாதையில் தங்கி உள்ளது. ஆனால், சீனாவின் அதீத பொருளாதார நலன் திட்டங்களை ஏற்றுக்கொண்டு விட்ட மியன்மாருக்கு அதிக அழுத்தம் கொடுப்பதில் தாராள ஜனநாயக மேலை நாடுகள் கவனமாய் இருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தை தேரவாத பௌத்தம் தனது அடிப்படைவாத சிந்தனைகளை நிறைவேற்றுவதற்கு, இலங்கையில் மேலை நாடுகளுக்கும் சீன பொருளாதார வளர்ச்சியின் திட்டங்களுக்கும் நடுவில் – உள்நாட்டில் சிறிய இனமான தமிழினம் எவ்வாறு அழிக்கப்பட்டதோ அதேபோல மீண்டும், மேலை நாடுகளிடம் நற்பெயர் பெற்றுக் கொண்ட ஆங் சான் சூகீ அம்மையாரையும் சீன பொருளாதார வளர்ச்சிக்கும் இடையில் வைத்து ரோஹிங்யா இனத்தவர்கள் கதை முடிக்கப்பட்டு உள்ளது.

தமிழினத்துக்கு நேர்ந்த கதிதான் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கும்

எந்தவித புலம்பெயர் மக்களின் பலமோ அல்லது புலம்பெயர் கட்டமைப்புகளோ இன்றி ரோஹிங்யா இனக் குழுமம் இன்று முழு உலகின் கவனத்தையும் மியன்மார் பக்கம் திருப்பி இருக்கிறது. சர்வதேச தலையீடு என்பது வல்லரசுகளின் நலன்களின் அடிப்படையிலானது என்பது பொதுவான ஒரு விதியாகப் பார்க்கப்படுகிறது.

ஆனாலும், அரசுகள் தமக்குப் பாதகம் விளைந்து விடாதபடியான கொள்கைகளில் நம்பிக்கை கொண்டுள்ள நிலை மிகச்சிறப்பாக பயன்படுத்தப்பட்டுள்ள இனவாதம் இஸ்லாமிய பயங்கரவாதத்தின் பெயரால் மேலை நாடுகளில் அடிபட்டுப் போகக் கூடிய சந்தர்ப்பமே அதிகம் உள்ளது. தாராள பொருளாதாரக் கொள்கை என்ற வகையில் மேலை நாடுகளுக்கு முதலீட்டு அழைப்பு விடுவதன் மூலம் குற்றங்களின் தன்மை வலுவிழந்து போய்விடும் என்பது பார்வையாக உள்ளது.

நன்றி: புதினப்பலகை

லோகன் பரமசாமி

கல்விப்புலத்தில் சாதனை...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், பரீட்சைகளில் சித்தியடைந்து உயர் பெறுபேறு பெற்று சாதனை படைத்த மாணவர்கள் ஊடகங்களுக்கு பேட்டியளிக்கும் போது அவர்களது உள்ளக்கிடக்கைகளில் வெளிப்படுத்தும் கருத்துக்கள் கற்பனாவாதத்தின் உச்சத்தைக் காண முடியும். நான் வைத்தியனாவேன், பொறியியலாளனாவேன், விஞ்ஞானியாவேன் இதுவே எனது எதிர்கால இலட்சியம்.

இத்தகைய இலட்சியக்கனவுகள் இவர்கள் கூறியபடி அனைத்தும் பிற்காலத்தில் நிறைவேறியுள்ளனவா என்பது சந்தேகமே. இப்படியான கருத்துக்களைப் பகிரும் எந்தவொரு மாணவனும் நான் மனிதநேயமுள்ளவனாக, ஒழுக்க விழுமியப்பண்புகளுடன் ஒழுகி வாழ்வேன் என்றுரைப்பதில்லை. இந்த மனப்பாங்கே அவனது எதிர்கால வாழ்வியலிலும் எதிரொலிக்கின்றது.

இன்றைய காலத்தில் மாணவர்களை பாராட்டுகின்றமை தொடர்பில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் விழிப்புடன் செயற்படுகின்றமை மிகவும் அவசியமாகிறது. குறிப்பாக ஆசிரியர்களின் பணி, கற்பித்தல் செயன்முறையுடன் மட்டும் நிற்காது மாணவர்களின் அடிப்படை நலன்களிலும் கரிசனை கொள்ளவேண்டியதும் அவசியம். இஃது ஆசிரியத் துவத்தின் அடிப்படைகளிலொன்றாகும்.

தற்போதைய பரீட்சையை நோக்காகக் கொண்ட திணிப்பு முறையிலான கல்வி முறையால் வெற்றி பெறுபவர்களைப் பாராட்டுகின்றமை மாணவர்களுக்கிருக்கின்ற இயல்பான திறமையையும் அறிவையும் மழுங்கடித்து, ஏனைய மாணவர்களின் மனப்பாங்குகளிலும் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களது எதிர்கால நலன்களிலும் பிறழ்ச்சிகள் ஏற்படத் தூண்டுகோலாக விளங்குகின்றன.

எனவே, பதின்ம வயதிற்குட்பட்ட வயதினரைப் பாராட்டுகையில், நேரடியான தனிநபரின் இயல்பு, ஆளுமை தொடர்பான தான புகழ்ச்சியைவிடவும் அவர்கள் அபிப்பிராயப்படும் படியாக அவர்கள் நிகழ்த்திய சாதனைகள், செயல்கள், சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் தொடர்பாகப் பாராட்டுவதன் மூலம் எதிர்கால மாணவ சமூகம் ஆரோக்கியமான திசையில் பயணிக்கும் நிலையை நிச்சயித்துக்கொள்ளலாம்.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு

முரண்பாடுகளுக்கு நிரந்தர தீர்வின்மையே காரணம்!

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 10

இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வு காணாது இருப்பதாலேயே நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தியும் நாளாந்தம் வீழ்ச்சியடைந்து வருகிறது என மைத்திரி - ரணில் தலைமையிலான தற்போதைய ஆளும் கூட்டணி அரசின் சபை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிட்ட பிரதான அரசியல் கட்சிகள் தேசிய இனப் பிரச்சினையை முன்வைத்தே தேர்தல்களில் வெற்றிபெற முயற்சித்துள்ளன. எனினும், ஆட்சிப்பீடம் ஏறியதும் அதனை மறந்து செயற்பட்டுள்ளமையாலேயே இதுவரை தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது போயுள்ளது என்றும் அமைச்சர் கிரியெல்ல விசனம் வெளியிட்டுள்ளார்.

எனினும், மைத்திரி - ரணில் தலைமையிலான தற்போதைய தேசிய அரசு முதன் முறையாகத் தேர்தல் காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு அமைய தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக புதிய அரசமைப்பு ஒன்றைத் தயாரித்து வருகிறது எனவும், இலங்கை அரசின் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

ஆனால், மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியினர் அரசின் இந்த முயற்சியை முன்வைத்து நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மஹிந்த அணியினரின் குறுகிய அரசியல் இலாபம் கருதிய இந்தச் சதித் திட்டங்களுக்கு நாட்டு மக்கள் துணை போகக் கூடாது என்றும் கேட்டுக் கொண்ட அமைச்சர் கிரியெல்ல, அதனையும் மீறி மக்கள் மஹிந்த அணியினரின் சதிவலைகளில் சிக்குவார்களானால் நாட்டில் மீண்டும் ஓர் இரத்த ஆறு பெருக்கெடுப்பதை யாராலும் தடுக்க முடியாது போய்விடும் என்றும் இலங்கை அரசின் சபை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல எச்சரிக்கை விடுத்துள்ளார். (க)

70 பிரதான கட்சிகள் தேர்தலுக்குத் தகுதி!

கொழும்பு, ஒக். 10

ஜனவரி மாதம் நடத்த உத்தேசித்துள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 70 பிரதான கட்சிகள் தகுதி பெற்றுள்ளன என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதான கட்சிகளுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு எதிர்காலத்தில் தெளிவுபடுத்தப்படும். மாவட்ட தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் பிரதித் தேர்தல் ஆணையாளர்களுக்கு விளக்கமளிக்கும் 3 நாள் செயலமர்வும் இடம்பெற்றுள்ளது.

வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான விவரங்களைக் கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேவையான பயிற்சி டிசெம்பர் மாதம் முதல் வழங்கப்படும்.

டிசெம்பர் மாதம் நடைபெறும் சாதாரண தரப் பரீட்சை கடமைகளில் பங்கேற்கும் ஆசிரியர்களுக்கு இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் தேவையான பயிற்சி வழங்கப்படும்.

337 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8 ஆயிரம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. வாக்களிப்பு மத்திய நிலையத்திலேயே வாக்குகள் எண்ணப்பட உள்ளன. 2017 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு இதற்காகப் பயன்படுத்தப்படும்.

வாக்காளர் இடாப்பு இந்த மாதம் 12 ஆம் திகதி நிறைவேற்றப்படும். ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக மேலும் பல சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளளோம் எனவும் அவற்றை விரைவில் முன்னெடுக்க உள்ளோம் எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மலையாள வகுப்புக்கள் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 10

இலங்கையில் மலையாள சமூகத்தினரின் பிள்ளைகளுக்கு மலையாள கல்வி வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வகுப்புக்கள் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதியின் இணைப்பாளர் எம்.கே.ராகுலனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வகுப்பு கொழும்பில் ஸ்ரீ நாராயணகுரு மண்டபத்தில் நடத்தப்படுகின்றது.

அரசிலுள்ள ஒரு சிலரது கருத்துக்கள் நடைமுறைக்குச் சாத்தியமற்றவை!

கொழும்பு, ஒக். 10

இலங்கையின் தற்போதைய தேசிய அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்று சுதந்திரக் கட்சியில் உள்ள சிலர் கூறிவரும் கருத்துக்கள் நடைமுறைக்குச் சாத்தியமற்றவை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு அமைய 2020 ஆம் ஆண்டு வரை ஐக்கிய தேசியக் கட்சியும் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து உருவாக்கியுள்ள தற்போதைய தேசிய அரசைக் கலைப்பதற்கு அதிகாரம் இல்லை.

இதனால், இவ்வாறானபின்னணியில் தேசிய அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதால் எந்தவித பயனும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி கூட்டத்தில் அமைச்சர் அமரவீர

தற்போதைய, அரசிலிருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு முன்வருமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் அழைப்பு விடுத்துவருகின்றமை தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர-

இந்த அழைப்புக்கள் குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவை என்றும் குற்றஞ்சாட்டினார். அதனை நிராகரித்தும் உள்ளார்.

காலைக்கதிர் Kālaikkathir

பண மதிப்பு நீக்கம் காரணமாக நாட்டுக்கு நிறைந்த பலன்கள்

புதுடில்லி ,ஒக்.10

பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் நிறையப் பலன்கள் கிடைத்துள்ளன என்று நிதி அமைச்சர் அருண்ஜெட்லி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் உள்ள பன்னாட்டு நிதியத்தின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நிதி அமைச்சர் அருண் ஜெட்லி அமெரிக்காவில் ஒரு வாரம் பயணம் மேற்கொள்கின்றார். இந்த நிலையில், தனது அமெரிக்க பயணத்துக்கு முன்னர் அவர் பெர்க்லி நகர இந்தியர்கள் மாநாட்டில் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறிவை வருமாறு :-

தூய்மை இந்தியா இயக்கம், சரக்கு, சேவை வரி விதிப்பு (ஜி.எஸ்.டி.), பண மதிப்பு நீக்க நடவடிக்கைகளுக்கு அவ்வளவாகப் பலன் இல்லை என்று கூறப்படுகின்றமையை

நிதி அமைச்சர் அருண்ஜெட்லி

ஏற்கமாட்டேன். இந்த மூன்றிலும் நல்ல விளைவுகள் ஏற்பட்டு உள்ளன. பணமதிப்பு நீக்கமும், ஜி.எஸ்.டியும் எதிர்பார்த்த அளவுக்குப் பொருளாதாரப் பலனைத் தந்துள்ளன. இதுவரை இல்லாத அளவுக்கு நாட்டின் வரிவருவாய் அதிகரித்து இருக்கின்றது.

இந்தியப் பொருளாதாரம் மீண்டும் தனது வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பும் என்ற

நம்பிக்கை எனக்கு உள்ளது.

இந்த வளர்ச்சி மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் விதத்தில் எழுச்சி காணும். ஏனென்றால், நாட்டில் உள்ள பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமன்றி, இளைய தலைமுறையினருக்கும் சேவை செய்யவேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.

பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் காஷ்மீரிலும், சத்தீஷ்காரிலும் பயங்கரவாதச் செயல்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக நடந்த கல்வீச்சு சம்பவங்கள் நின்றுவிட்டன. அங்கு கல்வீச்சில் ஈடுபட 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பேருக்கு பயங்கரவாத அமைப்புகள் நிதி உதவி செய்தன.

ஆனால், கடந்த மாதங்களில் காஷ்மீரில் கல்வீச்சு சம்பவங்கள் ஏன் நிகழவில்லை? காரணம் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் பயங்கரவாதிகளுக்கு நிதி கிடைக்கின்றமை நின்றுபோனதுதான்.

தூய்மை இந்தியா திட்டத்தைப் பொறுத்தவரை தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது முதல் முறையாக ஓர் இயக்கமாகக் கொண்டு வரப்பட்டு உள்ளது. அதிலும் எதிர்பார்த்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(ப)

லொறி மோதியதில் ரயில் ஓட்டுநர் சாவு

அதிர்ச்சியான சம்பவம் பஞ்சாப்பில்

அமிர்தசரஸ்,ஒக்.10

பஞ்சாப் மாநிலத்தில் ரயில் எஞ்சின் மீது லொறி மோதிய விபத்தில் ரயிலின் ஓட்டுநர் பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தின் பெரோஸ்பூர் நகரில் உள்ள லதுக்கா கிராமத்தின் பசில்கா அருகே நேற்று ஆளில்லா தண்டவாளத்தைக் கடந்து வந்த ஒரு லொறி அந்த வழியாக வந்த டீசல் ரயில் எஞ்ஜின் மீது பயங்கரமாக மோதியது.

சிமெந்து கலவை தயாரிக்கும் இராட்சத இயந்திரம் மோதிய வேகத்தில் ரயிலின் ஓட்டுநர் விகாஸ் கைய்பி என்பவர் இடிபாடுகளுக்கு இடையில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார். வழக்கமாக ரயில் விபத்துகளில் தண்டவாளத்தைக் கடந்து வாகனங்களில் செல்பவர்கள் உயிரிழப்பதுண்டு.

அதற்கு நேர்மாறாக, இந்த விபத்தில் ரயிலின் ஓட்டுநர் பலியான சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம்:

குற்றவாளிகள் 11 பேரின் தூக்கு ஆயுள் தண்டனையாகக் குறைப்பு

புதுடில்லி ,ஒக்.10

கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட 11 பேரின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி சபர்மதி ரயிலின்எஸ்-6பெட்டிக்குத் தீ வைக்கப்பட்டதில் 59 பேர் உயிரிழந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், 11 பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. சிறப்பு நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து குஜராத் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு

வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 11 பேரின் தண்டனை குறைக்கப்பட்டு ஆயுள்தண்டனையாக மாற்றி குஜராத் உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. தீர்ப்பில், பல குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

கேரள முதல்வருக்கு கமலஹாசன் வாழ்த்து!

பிராமணர் அல்லாதவர்களை அர்ச்சகர்களாக நியமித்த கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு நடிகர் கமலஹாசன் டுவிட்டரில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் 6 தலித்துகள் உட்பட 36 பிராமணர் அல்லாதவர்களை அர்ச்சகர்களாகத் திருவிதாங்கூர் தேவஸ்தானம் நியமித்துள்ளது. இவர்கள் முழு நேர மற்றும் பகுதி நேர அர்ச்சகர்களாகச் செயற்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கேரள அரசின் இந்த நடவடிக்கையை பல்வேறு தரப்பினரும் வரவேற்றுள்ளனர். இந்த நிலையில் நடிகர் கமலஹாசன் டுவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களை தாக்கிய இந்தியக் கடற்படையினர்!

இலங்கையில் இருந்த படகுகளை மீட்கச் சென்ற தமிழக மீனவர்கள் மீது இந்தியக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றமை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை வசம் இருந்த படகுகளை மீட்கச் சென்றபோது, தமிழக மீனவர்களுக்குப் போதிய எரிபொருள் வழங்கப்படவில்லை. அதேசமயம், இந்தியக் கடலோரப் பகுதியை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்த போது, வழியில்

ஒரு படகு பழுதாகி நின்றதால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தமிழக மீனவர்களுக்கும், இந்திய கடற்படை வீரர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதத்தில் ஈடுபட்ட தமிழக மீனவர்களை இந்திய கடற்படை வீரர்கள் தாக்கியுள்ளனர். தங்களை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்தனர் என மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேலும், பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள வலைகளையும் இந்தியக் கடற்படை வீரர்கள் சேதப்படுத்தினர் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்திய கடற்படைத் தாக்குதலில் காயமடைந்த மீனவர் செந்தில்குமார் உள்ளிட்ட மீனவர்கள் நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களை இந்திய கடற்படையினர் தாக்கிய சம்பவத்தால் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷில் படகு கவிழ்ந்து விபத்து: 12 ரோஹிங்யா அகதிகள் பரிதாபச் சாவு!

டாக்கா,ஒக்.10

மியன்மார் நாட்டிலிருந்து பங்களாதேஷுக்கு ரோஹிங்யா முஸ்லிம்கள் தப்பிச் சென்ற படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினேவில் சிறுபான்மை ரோஹிங்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்துவருகின்றனர். பங்களாதேஷ் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012 ஆம் ஆண்டில்இருந்துஆட்சியாளர்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதம்தாங்கிய போராட்டங்களில்

ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் தாக்குதலால் உயிருக்குப் பயந்து ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களாதேஷுக்குத் தப்பிச் சென்ற வண்ணம் உள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றின் வழியாக படகில் செல்லும் பலர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ரோஹிங்யா முஸ்லிம்கள் தப்பிச்சென்ற ஒரு படகு தெற்கு பங்களாதேஷ் பகுதியில் உள்ள ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 12 பேர் நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களின் உடல்களை பங்களாதேஷ் எல்லைப் பாதுகாப்புப் படையினர் மீட்டனர்.

இந்த விபத்தில் சிக்கிய 11 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஆற்றில் மூழ்கிய மேலும் சிலரைத் தேடும் பணிகளில் பங்களாதேஷ் கடலோர காவல் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

(ப)

சந்திரனுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் நாசா

நியூயோர்க்,ஒக்.10

அமெரிக்கா மீண்டும் சந்திரனில் ஆராய்ச்சி மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நிலையில், நிலவுக்கு மனிதர்களை அனுப்ப இருப்பதாக நாசா தெரிவித்துள்ளது.

சந்திரனுக்கு ரஷ்யா 'புட்னிக்' என்ற நாயை வெற்றிகரமாக அனுப்பி திரும்பக்கொண்டு வந்தது. அதற்குப் போட்டியாக அமெரிக்கா 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி முதன்முறையாக மனிதர்களை அனுப்பியது.

அங்கு இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் பெயர் சரித்திரத்தில் இடம்பெற்றது. சந்திரனில் இறங்கிய அவர் அங்கு அமெரிக்க கொடியை நட்டார். அது உலக வரலாற்றில் பெரிய மைல் கல்லாக உள்ளது.

அதன்பின்னர் அமெரிக்கா சந்திரனில் ஆய்வு செய்வதை நிறுத்தி விட்டு செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஆனால், இந்தியாவின் இஸ்ரோ மட்டுமே சந்திரனில் ஆய்வு செய்தது.

இந்த நிலையில், தற்போது அமெரிக்கா மீண்டும் சந்திரனில் ஆராய்ச்சி மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

50 ஆம் ஆண்டு நினைவில் சே குவேராவின் கல்லறை!

ஹவானா,ஒக்.10

பிரபல சோசலிசப் புரட்சியாளரான சே குவேரா கொல்லப்பட்ட 50ஆவது ஆண்டு நினைவு தினம் கியூபாவில் நேற்றுமுன்தினம் அனுசரிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

சே குவேரா அல்லது எல் சே என பொதுவாக அறியப்பட்ட எர்னெஸ்டோ குவேரா டி லா செர்னா ஆர்ஜென்டீனாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சோசலிசப் புரட்சியாளர். மருத்துவர், மார்க்சியவாதி, அரசியல்வாதி. கியூபா மற்றும் பல நாடுகளின் (கொங்கோ உட்பட) புரட்சிகளில் பங்குபற்றிய போராளி எனப் பல முகங்களைக் கொண்டவர்.

இவர் புரட்சிகளில் ஈடுபட்டதற்காக பொலியாவில் 1967 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8 ஆம் திகதி அரச படையினரால் கைது செய்யப்பட்டார். அடுத்த நாளே (9ஆம்திகதி) அவரை பொலிவிய படையினர் கொலை செய்தனர்.

அவரது உடல் முதலில் பொலிவியாவின் வேலேகிராண்ட் அருகே கனடாதே அர்ரோயாவில் புதைக்கப்பட்டது. பின்னர் 1997 ஆம் ஆண்டு, அவரது உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு

கியூபாவின் ஹவானா புரட்சி சதுக்கத்தில் விழா நடத்தப்பட்டு பின்னர் சாண்ட்டா கிளாராவில் புதைக்கப்பட்டது.

இந்த நிலையில், சே குவேரா பிடிபட்டு கொல்லப்பட்ட 50 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நேற்று முன்தினம் கியூபாவில் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. சே குவேராவின் உடல் அடக்கம் செய்யப்பட்டு, சிலை வைக்கப்பட்டிருக்கும் சாண்ட்டா கிளாராவில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடினர்.

தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்பட்ட இந்த நிகழ்வில் கியூபா அதிபர் ராவுல் காஸ்ட்ரோ மற்றும் பல பள்ளிக் குழந்தைகள் கலந்துகொண்டனர். அவரது கல்லறையில் ஒரு வெள்ளை ரோஜாவை ரவுல் காஸ்ட்ரோ வைத்து அஞ்சலி செலுத்தினார்.

ஆழமான காயங்களை ஆற்றும் 'மீட்ரோ' பசை

ஆழமான வெட்டுக் காயங்கள் உள்ளிட்ட பயங்கர காயங்களை இனி தையல் போடாமல் குணப்படுத்தும் அற்புத கண்டுபிடிப்பை சிட்னி மற்றும் அமெரிக்க மருத்துவ ஆய்வாளர்கள் தயாரித்துள்ளனர்.

பெரிய அளவிலான ஆழமான காயங்களுக்கு தையல் போடுவதற்குப் பதிலாக ஓர் ஊசி மூலம் இந்தப் பசையை காயத்துக்குள் செலுத்தி, புறஊதா கதிர் ஒளியின் மூலம் 60 நொடிகளுக்குள் விரைவாகக் காயவைத்து விட முடியும்.

விரிந்து, சுருங்கும் லாஸ்டிக் போன்ற தன்மையுள்ள இந்தப் பசை, களிம்பு போல திசுக்களுடன் படிந்து, உள் காயத்தை ஆற்றும் மருந்தாகவும் செயற்படும் ஆற்றல் கொண்டது என்பதை சிட்னி மற்றும் அமெரிக்க மருத்துவ ஆய்வாளர்கள் கூட்டாகக் கண்டுபிடித்தனர்.

இதயம், நுரையீரல் போன்ற

விரிந்து சுருங்கும் உறுப்புகளில் ஏற்படும் காயங்களுக்கு இது மிகப்பெரிய அருமருந்தாக இருக்கும் எனத் தெரிகிறது.

அற்புதக் கண்டுபிடிப்பு

மீட்ரோ எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பசையை எலி மற்றும் பன்றிகளின் காயங்களுக்குப் பயன்படுத்திய ஆய்வில் பெரிய பலன் கிட்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, ஆய்வக ரீதியாக மனிதர்களுக்கும் இந்தப் பசையைப் பயன்படுத்தி, அந்தச் சோதனை வெற்றி பெற்றால் பெரும் விபத்துகள் மற்றும் போர்முனைகளில் ஏற்படும் காயங்களில் ரத்தப் போக்கைத் தடுக்கவும், காயங்களை ஆற்றவும் இந்த மீட்ரோ நிவாரணமாகவும் கண்கண்ட மருந்தாகவும் இருக்கும். இதன் மூலம், அவசர சிகிச்சை கிடைக்காமல் பலியாகும் பல உயிர்களைக் காப்பாற்றலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

(ப)

காலைக்கதிர் Kalaikkathir

கிரிக்கெட்டை மேம்படுத்த எனது இறுதி முயற்சி இது!

மஹேல ஜயவர்த்தன தெரிவிப்பு

கிரிக்கெட் விளையாட்டின் தரத்தை மேம்படுத்தும் முயற்சியாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால் சுயாதீன கிரிக்கெட் ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவைச் சந்தித்து கலந்துரையாடினர். இந்தக் குழுவில் இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட விற்பன்னர்களான அரவிந்த டி சில்வா, மஹேல ஜயவர்தன, குமார் சங்ககார ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

முன்னாள் கிரிக்கெட் இடைக்கால சபைத் தலைவர் ஹேமக்க அமரசூரிய இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையுடன் முன்னாள் இலங்கை அணித் தலைவர் அநுர தென்னக்கோனும் குழுவில் இடம்பெறுகின்றனர்.

இலங்கைகிரிக்கெட்விளையாட்டுத்துறையை உயரிய நிலைக்கு இட்டுச் செல்லும் குறிக்கோளுடன் குறுகிய காலத்திட்டம் ஒன்றை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் சமர்ப்பிக்கவுள்ளார் என ஊடக வியலாளர்கள் மத்தியில் மஹேல ஜயவர்த்தன தெரிவித்தார்.

இலங்கைகிரிக்கெட்விளையாட்டை உயரிய நிலைக்கு இட்டுச் செல்வதற்கு தான் எடுக்கும் இறுதி முயற்சி இது வெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குறுகிய காலத் திட்டத்தைநிலையானதாக்கும் வகையிலான நீண்டகாலத்திட்டங்களும் என்னிடம் உள்ளன என்றார். இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஒட்டுமொத்த பொறுப்பு விளையாட்டுத்துறை அமைச்சரின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது எனவும் மஹேல தெரிவித்துள்ளார்.

நாங்கள் அங்கம் வகிக்கும் குழு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் குழுவல்ல. நாங்கள் முன்வைக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அவர்களது கடமை. எமது இந்தத் திட்டங்கள், யோசனைகள் செயற்படுத்தப்படாவிட்டால் இது தொடர்பில் நாம் செலவிடும் காலமும் எம்மிடையேயான சந்திப்புகளும் பயனற்றுப் போய்விடும் என மஹேல மேலும் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் கழக மட்ட கிரிக்கெட் போட்டிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை வகுப்பதற்குத் தனக்கு ஒரு வருட காலம் சென்றது எனத் தெரிவித்த மஹேல, 2015 இல் பதவியிலிருந்த இடைக்கால கிரிக்கெட் சபையின் தலைவர் சிதத் வெத்தமுனியின் வேண்டுகோளுக்கு அமையவே அந்தத் திட்டத்தைத் தயாரித்து வழங்கினார் எனவும் ஆனால், அந்தத் திட்டம்செயற்படுத்தப்படவில்லை எனவும் மஹேல ஜயவர்த்தன தெரிவித்தார்.

இப்போது கடைசி முயற்சியாக ஏதேனும் செய்யலாம் என எண்ணுகின்றேன். இது எனது கடைசி முயற்சியாக இருக்கும். கிரிக்கெட்நலனைக் கருத்தில்கொண்டு எமது யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படும் என நான் உண்மையாக நம்புகின்றேன்.

நாங்கள்எதிர்பார்க்கின்றமை நடைபெறாவிட்டால், நான் நிச்சயம் விலகிவிடுவேன் என்று மஹேல ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

டோனியின் மகளுடன் விளையாடிய கோஹ்லி

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் டோனியின் மகள் ஷிவாவுடன் விளையாடும் வீடியோவை விராட் கோஹ்லி டுவிட்டரில் பதிவேற்றியுள்ளார்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது. முதல் போட்டி ராஞ்சியில் 7 ஆம் திகதி நடைபெற்றது. முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி மழை குறுக்கிட்டதால் 18.4 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து, டக்வொர்த் லீவிஸ் விதிப்படி இந்திய அணி 5.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 49 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்குப் பின்னர் இந்திய அணியின் அணித்தலைவர் விராட் கோஹ்லி டுவிட்டரில் முன்னாள் டோனியின் மகள்ஷிவாவுடன்விளையாடும்ஒருவீடியோவைப் பகிர்ந்தார். இந்த வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலாக பரவிவருகிறது.

யாசிர் ஷாவின் டெஸ்ட் உலக சாதனை

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் யாசிர் ஷா தொடர்ந்து ஐந்து டெஸ்டில் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக யாசிர் ஷா திகழ்ந்து வருகிறார். 31 வயதாகும் இவர், ஏற்கனவே குறைந்த போட்டியில் 100 விக்கெட் வீழ்த்திய 2ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்திருந்தார். அஸ்வின் 18 போட்டியில் 100 விக்கெட்டுக்கள் வீழ்த்தி 3ஆவது இடத்தில் உள்ளார்.

தற்போது இலங்கைக்கு எதிராக நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்டில் திரிமன்ன விக்கெட்டை வீழ்த்தியபோது குறைந்த போட்டிகளில் 150 விக்கெட்டுக்கள் வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை வக்கார் யூனிஸ் உடன் பகிர்ந்துள்ளார்.

28 ஆண்டுகளின் பின் பிபா தொடரில் எகிப்து

2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் விளையாடுவதற்கு எகிப்து அணி தகுதி பெற்றுள்ளது.

கொங்கோ அணியுடன் இடம் பெற்ற தகுதிச் சுற்றுப் போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதன் மூலமே எகிப்து அணி இந்தத் தகுதியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்த வெற்றியினூடாக உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் எகிப்து அணி 28 ஆண்டுகளுக்குப் பின்னர் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் எகிப்து நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் கூடி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, எகிப்தின் இந்த வெற்றி மற்றும் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்காகத் தகுதி பெற்றது தொடர்பிலும் எகிப்திய ஜனாதிபதி அப்டெல் பட்டாஹ் அல் சிசி தனது மகிழ்ச்சியைப் பகிந்து கொண்டுள்ளார். அத்தோடு, நாட்டு மக்களுக்கும், உதைபந்து வீரர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பந்து வீச்சாளர்களால்

நெருக்கடிக்குள் பாகிஸ்தான்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் நகரில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் நிறைவில் சிறந்த பந்துவீச்சை வெளிக்காட்டிய இலங்கை வீரர்கள் பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸை 262 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தியுள்ளனர்.

போட்டியின் இரண்டாம் நாளில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸை வலுவான ஓட்டங்களுடன் (482) நிறைவு செய்த பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் போட்டியின் ஆட்ட நேர முடிவில் உறுதியான ஆரம்பம் ஒன்றை வெளிக்காட்டி 18 ஓவர்களுக்கு விக்கெட் இழப்புக்கள் எவையுமின்றி 51 ஓட்டங்களுடன் காணப்பட்டிருந்தது. மைதானத்தில் சமி அஸ்லம் 30 ஓட்டங்களுடனும் ஷான் மசூத் 15 ஓட்டங்களுடனும் நின்றிருந்தனர்.

போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தை இலங்கையின் முதல் இன்னிங்ஸை எட்டும் எதிர்பார்ப்புகளோடு ஆரம்பித்த பாகிஸ்தானுக்கு தனது கன்னி டெஸ்ட் விக்கெட்டைக் கைப்பற்றி இலங்கையின் வலது கை வேகப்பந்து வீச்சாளர் லஹிரு கமகே போட்டியின் 24 ஆவது ஓவரில் அதிர்ச்சியூட்டினார். இதனால் பாகிஸ்தானின் முதல் விக்கெட்டுக்கான இணைப்பாட்டம் 61 ஓட்டங்களோடு நிறைவுக்கு வந்தது. அத்துடன் முதல் விக்கெட்டாக ஆரம்ப வீரர் ஷான் மசூத் 16 ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்பியிருந்தார்.

இதனையடுத்து போட்டியின் அடுத்த ஓவரில் தில்ருவான் பெரேரா மற்றைய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சமி அஸ்லமையும் LBW முறையில் வீழ்த்தியிருந்தார். பாகிஸ்தான் இந்த விக்கெட்டுக்காக மூன்றாம் நடுவரின் உதவியை நாடிய போதும் அது அவர்களுக்கு பிரயோசனம் எதனையும் தரவில்லை. இதனால் சமி அஸ்லம் 39 ஓட்டங்களுடன் தனது இன்னிங்ஸை முடிக்க வேண்டி ஏற்பட்டது.

அடுத்து பாகிஸ்தானுக்காகத் துடுப்பாட்டத்தை முன்னெடுக்க வந்த வீரர்களான அசாத் சபீக் மற்றும் பாபர் அசாம் ஆகியோர் ஏமாற்றமான ஆட்டத்தை வெளிக்காட்டி மைதானத்தில் நீண்ட நேரம் நீடிக்காது போயிருந்தனர். இதனால் ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் 109 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான தருணத்தில் ஜோடி சேர்ந்த அசார் அலி மற்றும் ஹரிஸ் சொஹைல் ஆகியோர் நிதானமான முறையில் இலங்கை பந்து வீச்சாளர்களைக் கையாண்டு ஓட்டங்கள் சேர்க்கத் தொடங்கினர். மெதுவான முறையில் கட்டியெழுப்பப்பட்ட இவர்களது இணைப்பாட்டம் போட்டியின் தேநீர் இடைவேளை வரையும் நீடித்தது.

தேநீர் இடைவேளையை அடுத்து தொடர்ந்த ஆட்டத்தில் உறுதியான முறையில் பாகிஸ்தான் அணி ஓட்டங்களை சேர்த்தது. இதில் அசார் அலி தனது 27 ஆவது டெஸ்ட் அரைச்சதத் தைப் பூர்த்திசெய்து அணியை வலுப் படுத்தியிருந்தார். இலங்கை பந்து வீச் சாளர்களுக்கும் போட்டியின் இந்த இடைவெளியில் விக்கெட் ஒன்றைக் கைப்பற்று கின்றமை சிரமமாக அமைந்திருந்தது.

போட்டியின் இராப்போசன இடைவேளைக்கு முன் இலங்கை அணிக்குத் தேவையாகக் காணப்பட்டிருந்த பாகிஸ்தானின் விக்கெட்டை 72 ஆவது ஓவரில் ரங்கன ஹேரத் மூன்றாம் நடுவரின் உதவியோடு கைப் பற்றியிருந்தார். இதனால், பாகிஸ் தானின் ஐந்தாம் விக்கெட்டாக அசார் அலி மைதானத்தை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. அத்துடன், வலுவான இணைப்பாட்டம் ஒன்றும் 71 ஓட்டங்களுடன் முடிவடைந்தது. ஆட்டமிழக்கும் போது அசார் அலி 128 பந்துகளில் 6 பவுண்டரிகள் உடன் 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

போட்டியின் இராப்போசனத்தை அடுத்துத் தொடர்ந்த ஆட்டத்தில் பாகிஸ்தானின் மத்திய வரிசை மோசமான ஆட்டத்தை வெளிக்காட்டியது. பாகிஸ்தானின் அணித் தலைவர் சர்பராஸ் அஹ்மட் நம்பிக்கை தருவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தும் வெறும் 12 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்து ஏமாற்றியிருந்தார்.

சர்பராஸ் அஹ்மட்டின் விக்கெட்டை அடுத்து பாகிஸ்தானின் இறுதி நம்பிக்கையாகக் காணப்பட்ட ஹரிஸ் சொஹைலும் தில்ருவான் பெரேராவால் போட்டியின் 83 ஆவது ஓவரில் வீழ்த்தப்பட்டார். சொஹைலை அடுத்து பாகிஸ்தானுக்கு பின்வரிசை வீரர்கள் துரித கதி துடுப்பாட்டம் மூலம் சிறிது நேரம் உதவினர். முடிவில் 90.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த பாகிஸ்தான் 262 ஓட்டங்களை தமது முதல் இன்னிங்ஸுக்காகப் பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்த ஹரிஸ் சொஹைல் 135 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 4 பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இலங்கை அணியின் பந்து வீச்சில் அனைத்து பந்து வீச்சாளர்களும் சிறப்பான முறையில் செயற்பட்டிருந்தனர். இதில் சுழல் வீரர்களான ரங்கன ஹேரத் மற்றும் தில்ருவான் பெரேரா ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகள் வீதம் கைப்பற்றினர். அத்துடன், அறிமுக வேகப்பந்து வீச்சாளர் லஹிரு கமகே மற்றும் சுரங்க லக்மால் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகள் வீதமும் சாய்த்திருந்தனர்.

இதனையடுத்து 220 ஓட்டங்கள் முன்னிலையுடன் இலங்கை அணி தனது இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்தது. சவாலான இலக்கு ஒன்றை எதிரணிக்கு வைக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் இந்த இன்னிங்ஸில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கௌஷால் சில்வா மற்றும் திமுத் கருணாரத்ன ஆகிய இருவரும் பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு இரையாகியிருந்தனர். மூன்றாம் இலக்கத்தில் ஆடவந்த சதீர சமரவிக்ரமவும் பிரகாசிக்கவில்லை. இதனையடுத்து சுழல் வீரர் யாசிர் ஷாஹ்வாலும் இலங்கை அணியின் நான்காம் விக்கெட்டாக வீழ்த்தப்பட்டது. இதனையடுத்து மைதானம் விரைந்த இலங்கை அணித் தலைவர் தினேஷ் சந்திமாலும் ஓட்ட மேதுமின்றி வெளியேறினார்.

இதனால் தடுமாற்றமான ஆரம்பம் ஒன்றைக் காட்டிய இலங்கை அணி போட்டியின் மூன்றாம் நாள் நிறைவில் 14.3 ஓவர்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து 34 ஓட்டங்களுடன் காணப்பட்டு பாகிஸ்தானை விட 254 ஓட்டங்கள் முன்னிலை வகிக்கின்றது. களத்தில் குசல் மெண்டிஸ் 8 ஓட்டங்களுடன் உள்ளார்.

15 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்ட நேற்றையதினத்தில் இலங்கை அணிக்கு இரண்டாம் இன்னிங்ஸில் அச்சுறுத்திய வஹாப் ரியாஸ் 3 விக்கெட்டுகளை கைப்பற்றி நல்லதோர் ஆரம்பத்தை பாகிஸ்தானுக்கு வழங்கியிருந்தார். போட்டியின் நான்காம் நாள் இன்று.

காலைக்கதிர் Kalaikkathir

அரசியல் கைதி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளதமிழ்அரசியல்கைதிகளின் கோரிக்கைகளை அரசு நிறை வேற்ற வேண்டும் எனவும், அரசியல் கைதிகள் அனைவரது விடுதலையை வலியுறுத்தியும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாபெ ரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

132 அரசியல் கைதிகள் இலங்கையின் பல்வேறுபட்ட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள மூன்று அரசியல் கைதிகள் இன்று பதினைந்தாவது நாளாக சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களது வழக்கு விசாரணைகள் ஏற்கனவே வவுனியா மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் சட்டமா அதிபரின் கோரிக்கைக்கு இணங்க அந்த வழக்குகள் இப்பொழுது அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

எதுவித காரணங்களும் இல்லாமல் இவர்களது வழக்குகள் வவுனியாவில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப் பட்டமையானது மிக மோசமான இனவாதத் தன்மை கொண்ட ஒரு நிலைப்பாடு. இந்த விடயத்தை சட்டமா அதிபர் ஏன் செய்தார் என்பது பாரிய கேள்வியாக வுள்ளது.

ஏற்கனவே வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போது அவர்களைக் குற்றவாளிகளாக மாற்றும் நோக்கோடு தான் அநுராதபுரம்சிறைச்சாலைக்குவழக்குகள் திடீரென சட்டமா அதிபர் திணைக்களத்தால் மாற்றப்பட்டுள்ளன. இச்செயலைத் தமிழ் மக்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றார்கள்.

இவர்களது வழக்குகள் அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற் றப்பட்டது சட்டத்திற்கு விரோதமானது; தான்தோன்றித் தனமானது. சட்டமா அதிபரின் மூர்க்கத்தனமான செயற்பாடே இதுவாகும். இவர்களதுவழக்குகள் மீண்டும் வவுனியா மேல் நீதி மன்றுக்கு மாற்றப்படவேண்டும்.

இதற்காகத்தான் இன்றைய ஆர்ப்பாட்டப்பேரணி நடை பெற்றது. இதே போன்று வவுனியாவிலும் நடைபெறுகின்றது.

ஜனாதிபதி இதற்கு உடனடியான தீர்வைக் கண்டு இந்த வழக்குகளை வவுனியாவிற்கு மாற்றாவிட்டால் தொடர்ந்தும் இவ்வாறான போராட்டங்கள் நடைபெறும்.

அது மாத்திரமல்ல இங்குள்ள அரச அலுவலங்கள் முடக்கப் படும். வடக்கிற்குள் ஜனாதிபதியோ பிரதமரோ வர முடியாது. அவர்கள் அப்படிவருவார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடுவோம். அதனை இந்த அரசு விரும்புகின்றதா என்பதனை ஜனாதிபதியும் பிரதமரும்தான் தீர்மானிக்க வேண்டும். ஆகவே இவர்களது வழக்குகளை வவுனியா நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும்.

நிபந்தனைகளின்றி 132 அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். ஆகவே இரண்டு கோரிக்கைகளையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டால். எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் பாரிய எதிர்ப்புக்களை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அனைத்து அமைச்சர்களும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். அனுராதபுரத் திற்கு மாற்றப்பட்ட வழக்குகளை மீண்டும் வவுனியாவிற்கு கொண்டு வர முடியாது என்பதனை நாங்கள் அறிகின்றோம். – என்றார்.

உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித்தேர்தல்களைப் பிற்போடுவதற்கு எந்தத் தேவையும் இல்லை எனவும், இந்தத் திருத்தங் களுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடக்கும் எனவும் அமைச்சர் பைசர் முஸ்தபா உறுதியளித்துள்ளார்.

இந்த சட்டத்தில் சபா நாயகர் கையொப்பம் இட்டதன் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப் படும் எனவும் மேலும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுக்க–தும்மோதர பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச் சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பசில் ராஜபக்ஷ நீண்ட காலத்துக்கு ஆட்சியில் இருக்கப் போகிறார்என எதிர்பார்த்துப்பணியாற்றியுள்ளார். அதனால் தான் மற்றவர்களின் முன் பாவங்களை ஏற்றுத் தேர்தலை நடத்தாமல் பிற்போடும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளேன் என அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பணிப்....

இந்த பணிப்பகிஷ்கரிப்பு நடத்த உத்தேசிக் கப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று அவசர சந்திப்பொன்று கொழும்பில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் சிறந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என வும், பிரச்சினைக்கு மிகவிரைவில் தீர்வொன்றை வழங்க சுகாதார அமைச்சு உறுதியளித்திருக்கின்றது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங் கம் அறிவித்துள்ளது.

இச்சந்திப்பைத் தொடர்ந்து கொழும்பில் நேற்று மாலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது இந்த அறி விப்பை அந்த சங்கம் விடுத்திருக்கிறது.

பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா, இப்போது தாம் சாதாரண ஒரு பிரஜையாக இங்கு வந்து தாம் மூடிய சட்டத் தாழ்பாளைத் தாமே திறக்கும்படி கேட்பதும் விநோத மானது" – என இந்த வழக்கில் இடையீட்டு மனுதாரராகப் பங்கு பற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர் நீதி மன்றத்தில் பிரதம நீதியரசர் பிரசாத் டெப், நீதியரசர்கள் புவனேகஅலுவிகார, நளின்பெரேரா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்சய் ராஜரட்ண முன்னிலையானார்.

மனுதாரர் சரத் என் சில்வா சார்பில் அவரே முன்னிலையானார். நீதிமன்றத்தில் சட்டத் தரணிகளுக்குரிய ஆசனங்களில் அமராத சரத் என் சில்வா, பொது மக்களின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

தான் நாட்டின் ஒரு பிரஜை என்ற முறையில் இந்த வழக்கில் ஆஜராகின்றார் என்று கூறிய அவர், தமக்காகத் தாமே நீதிமன்றத்தில்பிரசன்னமாகிவாதிடுவார் என்றார்.

அமைச்சர்கள் கபீர் காசிம், பைஸல்காசிம் ஆகியோர்உட்பட ஆறு பேர் இடையீட்டு மனுதாரர்களாக இவ்வழக்கில்தெரிபட விரும்பிவிண்ணப்பித்துஆஜராகியிருந்தனர்.

இவர்களுள் ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் தமக்குத் தாமே ஆஜரானார். ஏனையோர் சட்டத்தரணிகள் மூலம் முன்னிலையாகினர்.

முதலில் மனுதாரர் சரத் சில்வா தமது மனுவின் நோக்கத்தை விளங்கப்படுத்தினார்.

மாகாண சபைகள் தேர்தல் திருத்தச்சட்டம்நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது அங்கு இடம்பெற்ற விடயங்களை சரத் சில்வா நீதிமன்றத்தில் விவரித்தார்.

நாடாளுமன்ற விடயங்களை எந்த நீதிமன்றமும் விசாரிக்கவோ, கேள்விக்கு உட்படுத்தவோ முடியாது என்பதால் இந்த விடயங்களை சரத் சில்வா நீதிமன்றத்தில்தெரியப்படுத்துகின்றமையையும் அவற்றை நீதிமன்றத்தில்விவரிக்கின்றமையையும் சுமந்திரன் கடுமையாக ஆட்சேபித்தார்.

சரத் என் சில்வாவின் ஆரம்ப வுரையை அடுத்து சுமந்திரன் தனது வாதத்தை ஆரம்பித்தார்.

''நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமூலத்தை முன்னெடுக்கும் முறைமை தொடர்பாக நீதிமன்றம் தலையிடுவதற்கான ஒரு வாய்ப்புஅரசமைப்பின்121ஆவது பிரிவில்உள்ளது. அரசமைப்பின் 124 ஆவது பிரிவின் கீழ் மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் செய்து, அதனூடாக நிவாரணம் பெற முடிந்திருக்கும்.

ஆனால் அத்தகைய வழக்கு ஒன்றுக்காக நான் ஆஜராகி வாதிட்டபோது, பிரதம நீதியரசராக இருந்த இதே மனுதாரர் சரத் என் சில்வா அந்த வாய்ப்பை இறுகமூடித் தீர்ப்பளித்தார்.

ஒரு சட்டமூலத்தில் சபாநாயகர் ஒப்பமிட்டு அது சட்டமாகிவிட்டால் அதில் எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது என்ற அரசமைப்பு வாசகத்தைக் காட்டி அந்த வழக்கிற்கான வாசலை இறுக அடைத்து மூடி, உறுதிப்படுத்தும் தீர்ப்பு ஒன்றை வழங்கினார் சரத் என் சில்வா. அந்தத் தீர்ப்பு இன்று உயர்நீதிமன்றின் வழிகாட்டுத் தீர்ப்பாக உள்ளது.

அன்று பிரதம நீதியரசராக இருந்துதாம் மூடிய சட்டவாசலை இன்று சாதாரண பிரஜையாக வந்து திறக்க முயல்கிறார் சரத் என் சில்வா" – என்றார் சுமந்திரன் எம்.பி.

வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(உ)

அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈர்ப்புப்போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள்மற்றும்சிவில்அமைப்புக்கள் ஆகியனவும் ஆதரவு தெரிவித்திருந்தன.

யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாக யாழ்.நகரைச் சுற்றிச் சென்றமையுடன் வீதி மறியலையும் மேற்கொண்டனர். அத்துடன் மதியம் 12 மணியளவில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நிறைவுக்கு வந்தது.

சில மணி நேரம் இடம்பெற்ற வீதிமறியல்போராட்டத்தால்யாழ். நகரப் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

நீதிக்குப்புறம்பானமுறையில் வவுனியா நீதிமன்றிலிருந்து அனுராதபுரம்நீதிமன்றுக்குதமது வழக்குகள் மாற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும்மதியரசன் சுலக்ஷன், இராசையாதிருவருள், கணேசன் தர்சன் ஆகிய மூன்று அரசியல் கைதிகள் 15நாள்களாகஉணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில்ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களது கோரிக்கைகளை அரசுகண்டுகொள்ளாதநிலையில் அவர்களது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே நேற்றைய யாழ். கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

'நல்லாட்சி அரசே அரசியல் கைதிகளை விடுதலை செய்' , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அமைதி ஏன்? 'வெளியேறு! வெளியேறு! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமே அரசுக்கு ஆதரவு வழங்கியது போதும் வெளியேறு!' என கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆக்ரோஷமாக கோஷங்களை எழுப்பினர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தற்போதைய அரசு நல்லாட்சி என்று சொல்லக்கூடிய தகுதியை எப்போதோ இழந்து விட்டது எனத் தெரிவித்து 'நாசமாய்ப் போன ஆட்சியே! அரசியல் கைதிகளை விடுதலைசெய்'எனவும்பாதுகாப்பு இல்லையென்றால்ஏன்இராணுவமும், பொலிஸாரும்?வெளியேறுங்கள் வெளியேறுங்கள்! வெளியேறுங்கள்! எனவும் உரத்துக் குரல் எழுப்பினார். இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிவாஜிலிங்கத்துடன் இணைந்து கோஷமிட்டனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கைதிகளதுஉறவினர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியாவில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தல்களை ஜனவரி மூன்றாம் வாரம் நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் தயாராகி வருகின்றது.

அதேசமயம் அந்தத் தேர்தல்களின் மூலம் தனது அரசியல் வலிமையை நிரூபிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியும் மும்முரமாக முயற்சித்து வருகின்றது.

நல்லாட்சி அரசு தரப்புகள் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எனப் பிரிந்து நின்று உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொண்டால், தமது பலம் வலிமையாகத் தோற்றும் என்று கூட்டு எதிரணி நம்புகின்றது.

தற்போதைய நிலையில் புதிய அரசமைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்புக்கு முதல் ஏதேனும் ஒரு தேர்தலில் நல்லாட்சி அரசுத்தரப்புகள்பின்னடைவைக் கண்டு, கூட்டு எதிரணி முன்னணிக்கு வருமானால் அதுவே நல்லாட்சி அரசின் வீழ்ச்சிக்கு ஆரம்பம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, புதிய அரசமைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு வரை தேர்தல் எதிலும் தோற்காத ஒரு வியூகத்துக்கான யோசனையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றோர் நல்லாட்சி அரசுத் தலைமைக்கு எடுத்துரைத்திருக்கின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன அன்னபட்சி சின்னத்திலேயே களமிறங்கினர்.

அதேபோல நல்லாட்சிஅரசின் பிரதான பங்காளிகளும் அவற்றின் கூட்டமைப்புக் கட்சிகளும் அன்னப் பட்சிச் சின்னத்தில் ஒரே பட்டியலில் உள்ளூராட்சித் தேர்தலில்களமிறங்கவேண்டும்என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 271 பிரதேச சபைகள், 41நகர சபைகள், 23மாநகர சபைகள் என மொத்தம் 335 உள்ளூராட்சி சபைகளுக்குத்

பக்கம் 03 »»

கைதிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலத் தெரிகிறது எனக் குறிப்பிட்ட மாவை சேனாதிராஜா, இந்த விடயம் தொடர்பில் அரசுத்தலைவர்களான ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கூட்டமைப்பு நேரடியாகப் பேச்சு நடத்தி நியாயத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கும் என்றும் அக்கைதிகளிடம் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் கோரிக்கைதொடர்பில்சுமந்திரன், சட்டமா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தார். சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் இருப்பதால் வழக்கை வவுனியாவுக்கு மாற்ற முடியாது என்று சட்டமா அதிபர் தெரிவித்திருக்கின்றார்.

சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் எனில்அவர்களுக்குபாதுகாப்பை வழங்கியேனும் வழக்கை வவுனியாவிலேயே நடத்தவேண்டுமேயன்றி அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றுவது தீர்வாகாது என்பதை சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றும், அதற்கு சட்டமா அதிபர் சாதகமான பதிலை வழங்கவில்லை. எனவே இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் தான் பேசமுடியும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் நாடு திருப்பியவுடன் கூட்டமைப்பு விரைவில் அவர்களுடன் இவ்விடயம்தொடர்பில்பேச்சுநடத்தும் – என்றார்.

ஜனாதிபதி கலந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாடி கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட அதிதியாக கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இதன்போது இந்தப் பாட சாலைக்கு முன்பாக இருந்த வீட்டு வளாகத்திலிருந்து துப்பாக்கியொன்றை பாதுகாப்பு பிரிவினர் கைப்பற்றினர். இந்தத் துப்பாக்கியில் குண்டுகள் நிரப்பப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத்துப்பாக்கி, குரங்குகள் விரட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டது என ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனினும் இதுதொடர்பில் விரிவான விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னர் பதுளை மற்றும் அம்பாந்தோட்டை – அங்குனுகொல பெலஸ்ஸ ஆகிய பகுதிகளில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

உங்கள் பிள்ளைகளை ஏன் அமைச்சராக்க முடியாது? மலையக மக்களிடம் அமைச்சர் திகாம்பரம் கேள்வி!

கொழும்பு, ஒக். 10

தோட்டத் தொழிலாளியின் பிள்ளையாக பிறந்து ஓர் அமைச்சராக என்னால் ஆக முடியுமானால் ஏன் உங்கள் பிள்ளைகளை இவ்வாறு உருவாக்க முடியாது என அமைச்சர் பழனி திகாம்பரம் கேள்வியெழுப்பியுள்ளார்.

கண்டி மாவட்ட தொழிலாளர் தேசிய சங்க அமைப்பாளர் கே.சண்முகராஜின் ஏற்பாட்டில் கண்டி மாவட்ட பெருந்தோட்ட மக்கள் சந்திப்பும், பொதுக் கூட்டமும் புஸ்ஸல்லாவ மெல்போட் தோட்டத்தில் இடம் பெற்றது.

கண்டி மாவட்ட பெருந் தோட்டங்களை சேர்ந்த பொது மக்கள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கண்டி மாவட்ட அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது அடுத்த தேர்தல் வரப்போகின்றது. முன்னர் கண்டி மாவட்டத்தில் வாக்கு கேட்பவர் பரந்த மாதிரி கேட்கலாம். தற்போது அது இல்லை. வட்டார முறை வரப்போகின்றது.

அதற்கு உங்களை சார்ந்தவர்களை நியமிக்க நீங்கள் செயற்பட வேண்டும். சிலர் தேர்தல் காலங்களில் உங்கள் வாக்குகளை கொள்ளை அடிக்க வருவார்கள்.

அதற்கு நீங்கள் இடமளிக்காமல் கவனமாக இருக்க வேண்டும். தோட்ட தொழிலாளியின் பிள்ளையாக பிறந்து ஓர் அமைச்சராக என்னால் ஆக முடியுமானால் ஏன் உங்கள் பிள்ளைகளை இவ்வாறு உருவாக்க முடியாது.

உங்களால் முடியும் அதை நீங்கள் செய்ய வேண்டும். உங்கள் ஒற்றுமையே மலையகத்தின் பலம் எனத் தெரிவித்துள்ளார்.

(க)

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நேற்று முதியோர் விழிப்புணர்வு செயற்றிட்டம்!

வவுனியா, ஒக். 10

வவுனியா - முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் முதியோர் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கல்லூரி அதிபர் அல்ஹாஜ் எம்.சீ.ரம்சீன் தலைமையில் மாவட்ட சமூகசேவை அலுவலகத்தால் நேற்றுக் காலை முதியோர் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இளம் தலைமுறையினர் மத்தியில் மூத்தோர் விழுமியங்களை கொண்டு செல்லும் வகையில் வவுனியா மாவட்டத்தில் சிறப்பான முறையில் பாடசாலை மட்டங்களில் இச்செயற்திட்டம் இடம்பெற்று வருகிறது.

மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் தமிழ் இனியன் செ.ஸ்ரீநிவாசன் மூத்தோரின் சொல்லை இளைய தலைமுறையினர் செவிமடுக்க வேண்டும், அவர்களின் விழுமியப் பண்புகளைப் பேண வேண்டும் என்ற வகையில் 'கீரை இல்லாச்சோறும் கிழவி இல்லா வீடும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

தேசிய மீலாது நபி விழாவில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப் பட்டன.

(க)

சரத் என்.சில்வாவின் மனு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 10

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்துக்கு எதிராக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு, உயர்நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(க)

கல்குவாரி மற்றும் கூழாமுறிப்பு கிராம மக்களை சந்தித்தார் வட மாகாண அமைச்சர் சிவநேசன்!

மாங்குளம், ஒக். 10

முல்லைத்தீவு மாவட்டத்தின், மாங்குளம் கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள கல்குவாரி கிராம மக்களை வடமாகாணத்தின் விவசாய, நீர்ப்பாசன, கால் நடை மற்றும் மீன் பிடித்துறை அமைச்சர் க.சிவநேசன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் கல்குவாரி பகுதியில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, தொழிலின்மை, தோல்வி கண்டுள்ள வாழ்வாதாரத் திட்டங்கள், கல்வி வளர்ச்சியின்மை அக்கிராமத்திற்கென்று ஒரு பொது அமைப்புக்கூட இல்லாதநிலைமை தொடர்பில் ஆராயப்பட்டிருந்தன.

அத்துடன், குடிதண்ணீர்ப் பிரச்சினை போன்ற விவகாரங்கள் பற்றி முறைப்பாடுகள் அமைச்சரிடம் பொதுமக்கள் முன்வைத்திருந்ததோடு, அவற்றிற்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பில் ஆலோசனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள கூழாமுறிப்பு கிராமத்தின் பொது மக்களையும் வடமாகாண அமைச்சர் க.சிவநேசன் சந்தித்திருந்தார்.

தற்போதைய காலக்கட்டத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்கள் அமைச்சரிடம் முன் வைத்திருந்தனர்.

அத்துடன், கிராமத்தில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டுள்ளது.

அனைத்தையும் கேட்டறிந்த வடமாகாண அமைச்சர், தீர்வு காணக்கூடிய விடயங்களை இனம் கண்டு அதற்கான உதவிகளை வழங்குவேன் என உறுதியளித்துள்ளார்.

புலிகளுக்குப் பாதை காட்டியதற்காக ஒன்பது வருடங்கள் சிறை வாசம்!

வடக்கு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவிப்பு!

விடுதலைப் புலிகளுக்குப் பாதை காட்டினார் என்ற குற்றச்சாட்டில் 66 வயதான முதியவரொருவரும் அனுராதபுரம் சிறைச்சாலையில் அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என வடமாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் மிகுந்த கவலையுடன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பன்னிரண்டாயிரம் விடுதலைப்புலிகளை குடும்பங்களுடன் இணைத்துள்ள அரசாங்கத்திற்கு 160 பேரை விடுவிப்பது என்பது பாரதூரமான பிரச்சினையல்ல.

தயா மாஸ்டர், கருணா ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பாவி அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது?

கடந்த 14 நாள்களாக அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்து வரும் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு உடனடி முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவர் இது சம்பந்தமாக உடனடியாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்க முன்வர வேண்டும்.

160 அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிப்பது சாத்தியமில்லாது போனால் கட்டம் கட்டமாகவேனும் சில மாதங்களில் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(க)

அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி யாழ். நகரில் போராட்டம்

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும் அவர்கள் மீதான வழக்குகளை அனுராதபுரம் மற்றும் தென்பகுதி நீதிமன்றங்களுக்கு மாற்றுவதை எதிர்த்தும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பினர் நேற்று யாழ். பஸ் நிலையத்துக்கு முன்னால் மாபெரும் போராட்டத்தை நடத்தி இருந்தனர். பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்ட இந்தப் போராட்டத்தின் சில பதிவு களையே இங்கு காண்கிறீர்கள். *(படங்கள்: எஸ்.நிதர்ஷன்)*

இடைக்கால அறிக்கை தொடர்பில்

யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் கல்விசார் கலந்துரையாடல் நாளை

பொதுமக்களும் கலந்து கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஒக்.10

அரசமைப்பின் இடைக்கால அறிக்கைதொடர்பில்யாழ்.பல்கலைக் கழக சமூகத்தினது கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் என்று யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தினர் அறிவித் துள்ளனர்.

இந்த முக்கியமான கலந்துரை யாடலில் பல்கலைக்கழக சமூகத்தி னரையும் பொது மக்களையும் பங்கு பற்றுமாறு ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட் டுள்ள செய்திக் குறிப்பில் –

இலங்கையின் அரசியலில்மீண்டு மொரு புதிய அரசியல் வரைபொன்று வெளிவந்துள்ளது. இந்த இடைக்கால அறிக்கை அரச தரப்பினரால் அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடன் நாடாளுமன்றின் விவாதத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை தொடர்பில் பல வாதப்பிரதி வாதங் களும் நேரான மற்றும் எதி ரான கருத்துக்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் நீண்ட காலமாகத் தமிழர் களின் நியாயமான அரசியல் மற்றும் அவர்களது அபிலாசைகள் தொடர் பான ஆயுதப் போராட்டங்களிலும் அகிம்சை வழியிலான போராட்டங் களிலும் பங்கு கொண்டு வந்திருக் கின்றது.

நீண்ட ஆயுதப் போராட்டத்தின் விளைவாகத் தமிழர்கள் பேரம் பேசும் சக்தியாக உருவெடுத்திருந்தமை நாம் யாவரும் அறிந்ததே. எவ்வாறா யினும் சர்வதேச நாடுகளின் உதவியு டன் தமிழர்களது நியாயபூர்வமான ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டுமேமாதம்முடிவுக்குகொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் ஏறக் குறையஎட்டுஆண்டுகள்கடந்தநிலை யிலும் இன்னும் தீர்க்கப்படாத பிரச் சினையாகத்தமிழர்களது பிரச்சினை தொடர் கதையாக மாறியிருக்கின்றது.

தமிழர்களின் நீண்டகாலப் பிரச் சினைக்கான தீர்வின் பொருட்டு அரசி யல்வரைபுக்கானஇடைக்காலஅறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர் பிலானகருத்துக்கள்தமிழ்மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பு பல்கலைக்கழக சமூகத்திற்கும் உரிய தாகும்.

இந்த இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்களது நியாயபூர்வமான அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் முன்மொழிவுகள் இருக்கின்றனவா என்பது தொடர்பில், தமிழ் பேசும் மக் களுக்குஒருகருத்தினைமிகச்சரியான முறையிலும் மிகச்சரியான தருணத் திலும் வெளிக்கொண்டுவரும் நோக் கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் அக்கறையுடன் உள்ளது.

இதன்மூலம்உண்மைநிலைவரம் தமிழர்களுக்குத் தெரியப்படுத்தப்படு வதற்கானசூழல்ஒன்றுஏற்பட்டுள்ளது. ஏனெனில் எந்தவிதமான அரசியல் சலனங்களும் இல்லாமல், முழுக்க முழுக்க கல்விசார் கலந்துரையாடல் மூலம்தமிழ்மக்களுக்கு இந்தஇடைக் காலஅறிக்கையின்உள்ளடக்கத்தின்உண்மை நிலைவரம் வெளிப்படுத்தப்படுவதற் கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கான ஒத்துழைப்பினை அனைத்து தரப்பினரும் தந்துதவு மாறு பல்கலைக்கழக சமூகம் கேட்டுக் கொள்கிறது. – என்றுள்ளது. (இ

விழிப்புலனற்றோருக்கு பிறைலி இயந்திரங்கள்

யாழ். இந்து பழைய மாணவர்கள் வழங்கினர்

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்1994க.பொ.த. சாதாரணதரம், 1994 உயர் தரம் பயின்று உயிர் நீத்த மாணவர்களின்நினைவாக அதே பிரிவைச் சேர்ந்த பழைய மாணவர்களால் தர்மபுரத்தில்அமைந்துள்ள சைவநெறிக் கூடத்தின் விழிப்புலனற்றோர் பயிற் சிக்கான பிறைலி இயங் திரங்களையும்அதற்கான கற்றல் உபகரணங்களை வழங்குதலும் மற்றும் இரத்ததானநிகழ்வும்கடந்த 7 ஆம்திகதி, சனிக்கிழமை தர்மபுரத்தில்அமைந்துள்ள சைவநெறிக் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகயாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதல்வர் ஜ.தயானந்தராஜாவும், சிறப்புவிருந்தினராகயாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தின் தலைவரும், மருத்து வருமான வை.யோகேஸ் வரனும் கௌரவ விருந்தி னர்களாக 'மானிடம்' அறக் கட்டளையின் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்த குமார், மானிடம் அறக்கட் டளையின் அறங்காவலர் எஸ்.சண்முகநாதன், வாழ்வகம் நிறுவனத் தலைவர் கலாநிதி ரவீந் திரன், வன்னி மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத் தின்தாபகரும்,இனியவாழ்வு இல்லத்தின்உபதலைவரு மாகிய ரூபன் மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 94 – 97 பிரிவு மாணவர்களுக்குக்கற்பித்த ஆசிரியர் கே.குணசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில்எட்டுலட்சத்து ஐம்பதாயிரம்ரூபாபெறுமதி யான பிறைலி தட்டச்சு இயந்திரங்களும், பிறைல் கற்பித்தலுக்கான கற்றல் உபகரணங்களும் யாழ்ப் பாணம் இந்துக்கல்லூரி யில் 1994 க.பொ.த. சாதா ரணதரம், 1994 உயர்தரம் பயின்று உயிர்நீத்தமாண வர்களின்நினைவாகஅதே பிரிவைச் சேர்ந்த பழைய மாணவர்களால் அதன்நிர் வாகிகளிடமும், பயிற்சிஆசி ரியரிடமும்வழங்கப்பட்டன.

அதேநேரத்தில், பயிற்சி நிலையத்தில்யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 94 – 97 பிரிவுமாணவர்களின்இரத்த தான நிகழ்வும் இடம்பெற் றது.

லிற்றோ காஸ் நிறுவனத்தின் தலைவர் கைது

தாய்வான் வங்கியில் இருந்து காணாமல் போன 1.1 மில்லியன் டொலர் பணம் , லிற்றோ காஸ் நிறுவனத்தின் தலைவரின் தனிப்பட்ட வங்கிக்கணக்கில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் லிற்றோ காஸ் நிறுவனத் தின் தலைவர் லிலா முனசிங்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கணக்கில் இருந்து பணத்தை மீளப்பெற வந்த நபரொருவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என காவல் துறை தெரிவித்தது.

குறித்த வங்கியின் கணினி அமைப்பில் அத்துமீறிப் பிர வேசித்து அதன் நிதியை இலங்கை உள்ளிட்ட பல்வேறுநாடு களின் கணக்குகளுக்கு பரிமாற்றியது தொடர்பில் தற்போ தைய நிலையில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து தாய்வான் பிர தமர் விலியம் லாய் , அந்நாட்டு வங்கித் தகவல் பாதுகாப்பு அமைப்பைப் பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளு மாறு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.